لا اله الا الله محمد رسول الله

# நபி வழி

## உண்மை இஸ்லாத்தின் கொள்கை விளக்க இதழ்





பிப்ரவரி - 2009 விலை ரூபாய் 7/-

# மகனைப் பற்றிய முன்னறிவிப்புகள்

## திருக்குர்ஆனிலிருந்து...

''(இதற்கு அல்லாஹ் இவ்வாறு கூறினான்:) ஸகரிய்யாவே! நாம் உமக்கு ஒரு மகனைப்பற்றிய நற்செய்தியினை வழங்குகின்றோம். (அவர் வாலிப வயதையடைவார்.) அவர் பெயர் யஹ்யாவாகும். நாம் இதற்கு முன்னர் எவருக்கும் இந்தப் பெயரை சூட்டவில்லை.

அவர் கூறினார்: என் இறைவா! என் மனைவி மலடியாகவும் நான் முதுமையின் இறுதி எல்லையை அடைந்தவனாகவும் இருக்கின்ற நிலையில் எனக்கு எவ்வாறு மகன் பிறக்கமுடியும்?

(வானவர்) கூறினார்: அவ்வாறே (நிகழும்). உமது இறைவன், இது எனக்கு மிக எளிதானதே என்றும், நிச்சயமாக நான் இதற்கு முன்னர் உம்மை ஒன்றும் அற்ற நிலையிலிருந்து படைத்தேன் என்றும் கூறினான். *(திருக்குர் ஆன் 19:8-10)*

''(அதற்கு அவர்) நான் உமக்கு தூய ஒரு மகனை(ப்பற்றிய நற்செய்தி) வழங்குவதற்காக (வந்துள்ள) உமது இறைவனின் தூதரே ஆவேன் என்று கூறினார்.

(மர்யம்) கூறினார்: இதுவரை ஆடவர் எவரும் என்னைத் தொடாதிருக்கும் நிலையிலும், நான் ஒருபோதும் தீய நடத்தையில் ஈடுபடாதவளாக இருக்கும் நிலையிலும் எனக்கு எவ்வாறு குழந்தை பிறக்கும்?

(வானவர்) கூறினார். அவ்வாறே (நிகழும்). உமது இறைவன் கூறுகின்றான். இது எனக்கு எளிதேயாகும்.

மேலும் நாம் அவரை மக்களுக்கு ஓர் அடையாளமாகவும் எம்மிடமிருந்து கருணையாகவும் ஆக்குவோம். இது (ஏற்கனவே) விதிக்கப்பட்ட ஒன்றாகும்''. *(திருக்குர்ஆன் 19: 20-22)*

## நபிமொழியிலிருந்து....

''ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஈசப்னு மர்யம் பூமியில் தோன்றுவார்; அவர் திருமணம் செய்வார்; மேலும் அவருக்கு குழந்தை பிறக்கும் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்''. *(மிஷ்காத். பாப் நுஸூலு ஈசா)*

## இமாம் மஹ்தி (அலை) அவர்களின் நூலிலிருந்து....

''வாக்களிக்கப்பட்ட மஸீஹ் திருமணம் செய்வார். அவருக்கு குழந்தை பிறக்கும் என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இதில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது என்னவென்றால், இறைவன் (மஸீஹாகிய) அவருக்கு சாலிஹான மகனைக் கொடுப்பான். அந்த மகன் தன் தந்தையைப் போன்று இருப்பார். அவர் தன் தந்தையை மறுப்பவராக இருக்கமாட்டார். அவர் இறைவனிடம் நன்மதிப்பைப் பெற்ற நல்லடியார்களைச் சேர்ந்தவராக விளங்குவார். மேலும் அல்லாஹ் நபிமார்களுக்கும், வலிமார்களுக்கும் சந்ததி பிறப்பதைப் பற்றி நற்செய்தி கூறுகின்றான் என்றால், அவர்களின் பிறப்பு சாலிஹான (நல்ல) பிறப்பாக இருக்கும்போதுதான் நற்செய்தி கூறுகின்றான்.'' *(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம், பக்கம் 579)*

# வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி

**மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வரலாற்றில் பிப்ரவரி 20ஆம் நாள் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு நாளாகும். ஆம்! முஹம்மதிய்ய உம்மத்தில் தோன்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு குழந்தை பிறக்கும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்துள்ளபடி, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட மகனைப் பற்றி இறைவன் நற்செய்தி அறிவித்தது இந்த நன்னாளில் தான்!!

**நபிமொழியில் நாம் இவ்வாறு காண்கிறோம்:**

''ஹஸ்ரத் அப்துல்லாஹ்பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஈசப்னு மர்யம் பூமியில் தோன்றுவார்; அவர் திருமணம் செய்வார்; மேலும் அவருக்குக் குழந்தை பிறக்கும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்''. *(மிஷ்காத் பாப் நுஸூலு ஈசா)*

இந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி சில வலுவான முன்னறிவிப்புகளை செய்துள்ளார்கள். அவற்றுள் ஒன்று, அவர் திருமணம் செய்வார். அவருக்குக் குழந்தை பிறக்கும் என்பதுமாகும். திருமணம் செய்வதும் குழந்தைகளைக் கொண்டிருப்பதும் மட்டும் ஒருவர் இறைவனால் நியமிக்கப்பட்டவர் என்பதற்கு சான்றாகி விடாது என்பது வெளிப்படை. ஏனெனில் எல்லாரும்தான் திருமணம் செய்கின்றனர்; குழந்தைகளும் பிறக்கின்றன. எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மகனைப் பற்றிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு வேறு ஏதோ ஒரு தூதுச் செய்தியை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதன் குறிக்கோள், வாக்களிக்கப் பட்ட மஸீஹ் ஒரு வாக்களிக்கப்பட்ட திருமணம் செய்வார். அது ஓர் இறை அடையாளமாக விளங்கும். அதன் விளைவாக அவருக்கு வாக்களிக்கப்பட்ட மகன் பிறப்பார். அவர் தன்னிகரற்றவராகத் திகழ்வார் என்பதாகும்.

மேற்கண்ட நபிமொழிக்கு விளக்கமளிக்கையில் **ஹஸ்ரத் வாக்களிக்கப் பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

''வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கு குழந்தை பிறக்கும் என்ற முன்னறிவிப்பு சுட்டிக் காட்டுவது என்னவெனில், இறைவன் அவருடைய தலைமுறையிலிருந்து ஒருவரை தோற்று விப்பான். அவர் அவருடைய பிரதிநிதியாக இருப்பார். இவர் இஸ்லாம் மார்க்கத்திற்கு உதவி செய்வார் என்பதாகும். எனது வேறு சில முன்னறிவிப்புகளில் இது காணப்படுகின்றது.'' *(ஹகீகத்துல் வஹீ ருஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் : 325)*

**இன்னோரிடத்தில் அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

''வாக்களிக்கப்பட்ட மஸீஹ் திருமணம் செய்வார். அவருக்குக் குழந்தை பிறக்கும் என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இதில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பது என்னவென்றால், இறைவன் (மஸீஹாகிய) அவருக்கு சாலிஹான மகனைக் கொடுப்பான். அந்த மகன் தன் தந்தையைப் போன்று இருப்பார். அவர் தன் தந்தையை மறுப்பவராக இருக்க மாட்டார். அவர் இறைவனிடம் நன்மதிப்பைப் பெற்ற நல்லடியார்களைச் சேர்ந்தவராக விளங்குவார்.

மேலும் அல்லாஹ் நபிமார்களுக்கும், வலிமார்களுக்கும் சந்ததி பிறப்பதைப் பற்றி நற்செய்தி கூறுகின்றான் என்றால், அவர்களின் பிறப்பு சாலிஹான (நல்ல) பிறப்பாக இருக்கும் போதுதான் நற்செய்தி கூறு கின்றான்''. ***(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் பக்கம் 579)***

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கிணங்க, இமாம் மஹ்தியும், வாக்களிக்கப்பட்ட மஸீஹுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் 1886ஆம் ஆண்டு பிப்ரவரி 20ஆம் நாள் வாக்களிக்கப்பட்ட மகனைப் பற்றிய நற்செய்தியை இறைவனிட மிருந்து பெற்றார்கள். முன்னறிவிப்பில் இவ்வாறு வருகிறது:

''நீர் என்னிடம் கேட்டதற்கிணங்க நான் அருளின் ஓர் அடையாளத்தை உமக்கு வழங்குகின்றேன்... உமக்கு ஒரு நற்செய்தி! கம்பீரமான ஒரு தூய மகன் உமக்கு வழங்கப்படுகிறார்''. *(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 100).*

இந்த முன்னறிவிப்பிற்கான கால அவகாசம் 9 ஆண்டுகள் என்ற போதிலும் 3 ஆண்டுகளுக்குள் அதாவது 1889ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் நாள் வாக்களிக்கப்பட்ட மகன் பிறந்தார். அவருக்கு **மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது** எனப் பெயரிடப்பட்டது. அவர்களே முஸ்லிஹ் மவ்வூது (வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி) எனவும் அழைக்கப்பட்டார்கள். இவர்களே பிற்காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் இரண்டாவது கலீஃபாவாகவும் திகழ்ந்தார்கள். முன்னறிவிப்பில் கூறப்பட்ட நற்பண்புகள் அனைத்தும் அவர்களிடம் காணப்பட்டன. தாமே முன்னறிவிக்கப்பட்ட மகன் என்பதை அவர்களும் இவ்வாறு அறிவித்தார்கள்:

''ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பிற்கிணங்க அன்னாரின் வாக்களிக்கப்பட்ட மகனாக இறைவன் என்னை நியமித்துள்ளான் என இறை கட்டளையின்படி நான் ஆணையிட்டுக் கூறுகிறேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயரை பூமியின் எல்லைகள் வரை எட்ட வைப்பது எனது பணியாகும்... எந்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஹோஷ்யார்பூர் என்ற இந்த நகரத்தில், முன்னால் இருக்கும் இந்த வீட்டில் இறங்கியதோ, எதனை அவர்கள் இந்த நகரத்திலிருந்தே அறிவிப்பு செய்தார்களோ மேலும் எதைப் பற்றி (வாக்களிக்கப்பட்ட மகனாகிய) அவர் 9 ஆண்டுகளுக்குள் பிறப்பார் என அறிவிப்பு செய்தார்களோ அந்த முன்னறிப்பு என் மூலமாக நிறைவேறிவிட்டது''. *(அல்ஃபஸ்ல் பத்திரிகை 19-02-1960)*

இறைவன் வாக்களிக்கப்பட்ட மகனின் பல்வேறு சிறப்புப் பண்புகளில் ஒன்றாக 'அவர் மிகவும் புத்திக் கூர்மை உள்ளவராகவும், நுண்ணிய அறிவுடையவராகவும் விளங்குவார்' என்றும் குறிப்பிட்டிருந்தான். இதற்கேற்ப அன்னாரின் புத்திக் கூர்மைக்கும் நுண்ணறிவுக்கும் ஏராளமான சம்பவங்கள் உள்ளன. சிறுவயதிலேயே அவர்களுக்கு திருக்குர்ஆனுடன் ஓர் ஆழமான தொடர்பு இருந்தது. அவர்கள் தமது சொற் பொழிவுகளால் திருக்குர்ஆனின் ஞானங்களை விளக்கிக் கூறினார்கள். 10 வயதாக இருக்கும்போது இஸ்லாத்தின் அனுதாபிகள் மன்றத்தில் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவைப் பற்றி ஹஸ்ரத் அப்துல் ரஹ்மான் (ரலி) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

''அது எத்தகைய சொற்பொழிவு! இறைஞானத்தின் ஓர் ஆறாகவும், ஆன்மீகத்தின் ஒரு கடலாகவும் இருந்தது! சொற்பொழிவு முடிந்ததும் ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள்... அவருடைய சொற்பொழிவை மிகவும் பாராட்டினார்கள். எடுத்துரைக்கும் ஆற்றலையும், உரையாற்றும் திறமையையும் போற்றினார்கள். திருக்குர்ஆனின் ஆழிய கருத்துகளையும் நுட்பமான சான்றுகளையும் கேட்டு துஆ செய்தவாறு வீடுவரை வந்து விட்டுச் சென்றார்கள்.'' *(அல் ஹகம் பத்திரிகை 16-10-1939)*

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 1906ஆம் ஆண்டு தமது 17வது வயதில் காதியான் ஆண்டு மாநாட்டில் முதன்முறையாக சொற்பொழி வாற்றினார்கள். அப்போது அவர்கள் சூரா

லுக்மானின் 2வது ருகூவுக்கு விளக்கவுரை யாற்றினார்கள். அதனைக் கேட்ட புகழ்பெற்ற இலக்கியப் பேராசிரியர் காஸி ஸுஹூருத்தீன் அக்மல் இவ்வாறு கூறினார்:

''நான் அவருடைய சொற்பொழிவை மிகவும் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் என்ன சொல்வது? சொற்செறிவின் ஒரு வெள்ளம் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது''. *(அல்ஹகம் 10-01-1907)*

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''எனக்கு மக்களின் முகங்கள் தென்படவில்லை. இருட்டாகத் தெரிந்தது. நான் என்ன கூறிக் கொண்டிருக்கிறேன் என்பது எனக்குத் தெரியாதிருந்தது. பின்னர் நான் பத்திரிகையில் படித்தபோதுதான் நான் என்ன கூறினேன் என்பது எனக்குத் தெரிய வந்தது''. (அல்ஹகம் பத்திரிகை நூற்றாண்டு மலர் 1939)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு வானவர்கள் சூரா ஃபாத்திஹாவின் தஃப்ஸீரை கற்றுக் கொடுத்தனர். சூராஃபாத்திஹாவின் புதுப்புது விளக்கங்கள் எனக்குப் புரிய வைக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார்கள். (1920ம் ஆண்டு மாநாட்டின் சொற்பொழிவு)

சூரா ஃபாத்திஹாவின் இந்த விளக்கவுரை 'சமாதான வழி' மாத இதழில் தொடராக வெளிவந்தது. தற்போது நூல் வடிவில் வெளியிடும் முயற்சிகள் நடந்து கொண்டிருக் கின்றன. அந்த விளக்கவுரையும் 'அவர் நுண்ணறிவுள்ளவராக விளங்குவார்' என்ற முன்னறிவிப்புக்கு சான்றாக விளங்குகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் திருக்குர்ஆனுக்குக் கொடுத்துள்ள விளக்கவுரை 10 தொகுதிகளில் பரவிக் கிடக்கின்றது. இதனை நேரடியாகப் படித்துப் பார்த்த அஹ்மதிய்யல்லாத மவ்லவிகள் கூட பாராட்டிக் கூறியுள்ளனர். ஃபதஹ்பூரைச் சேர்ந்த மவ்லானா நியாஸ் என்பவர் கீழ்வருமாறு எழுதுகிறார்:

''ஹஸ்ரத்தின் தஃப்ஸீரே கபீர் தொகுதி 3 தற்போது எனக்கு முன்னால் இருக்கிறது. நான் அதனை மிக ஆழமான பார்வையுடன் பார்க்கின்றேன். திருக்குர்ஆனைப் படிப்பதில் ஒரு புதிய கோணத்தில் சிந்தனையை தூண்டியுள்ளார் என்பதில் ஐயமில்லை. இந்த விளக்கவுரை தனது விதத்தைப் பொருத்த வரை முற்றிலும் முதல் விளக்கவுரையாகும். இதில் அறிவையும் சான்றையும் மிக அருமையான முறையில் ஒன்று படுத்திக் காட்டப்பட்டுள்ளது. அவருடைய புத்திக் கூர்மையும், விசாலமான பார்வையும், சான்றளிக்கும் அழகும் அதன் ஒவ்வொரு சொல்லிலிருந்தும் மிகத் தெளிவாகத் தெரிகின்றது''. *(மல்ஃபூஸாத்தே நியாஸ் தொகுதி 125)*

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் குர்ஆன் ஞானத்தையும், அவர்கள் உருவாக்கிய கட்டுப்படும் தன்மையுள்ள ஜமாஅத்தையும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் எதிரிகள் கூட ஏற்றுக் கொள்கின்றனர். ஜமீன்தார் பத்திரிக்கையின் ஆசிரியர் மவ்லவி ஸஃபர் அலிகான் ஒருமுறை இவ்வாறு குறிப்பிட்டார்:

''காது திறந்து கேளுங்கள். நீங்களும், உங்களுடன் உள்ளவர்களும், மறுமை வரை மிர்ஸா மஹ்மூதை எதிர்த்துப் போட்டிப் போட முடியாது, மிர்ஸா மஹ்மூதிடம் குர்ஆன் இருக்கிறது. உங்களிடம் என்ன இருக்கிறது? நீங்கள் கனவில் கூட ஒருபோதும் குர்ஆனை ஓதியதில்லை. மிர்ஸா மஹ்மூதிடம் அவரது சைகையின்படி உடலாலும் உள்ளத்தாலும் தியாகம் செய்வதற்கு ஆயத்தமான ஜமாஅத் இருக்கிறது. மிர்ஸா மஹ்மூதிடம் கொள்கை பரப்புநர்கள் இருக்கின்றனர். எல்லா கல்வியிலும் திறமையுடையவர்கள் இருக்கின்றனர். உலகத்தின் ஒவ்வொரு நாட்டிலும் அவர் கொடியை நிலைநாட்டியுள்ளார்''. *(எக் கவ்ஃப்நாக் ஸாஸிஷ் பக்கம் 197)*

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் 52 ஆண்டுகளாக வாக்களிக்கப்பட்ட மஸீஹின் இரண்டாவது

**(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்)**

# மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மூன்றாவது கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹி) அவர்கள் ஆவார்கள். அன்னார் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தூய தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் (அலை) அவர்களின் பேரரும், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபாவான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களின் மகனும் ஆவார்கள்.

தாலமூத் என்னும் வேதத்தில் மன்னர் மஸீஹின் மரணத்திற்குப்பின் அவருடைய அரசாட்சி அவருடைய மகனுக்கும், பிறகு அவருடைய பேரனுக்கும் இறங்கிவரும் என்ற முன்னறிவிப்பு காணப்படுகிறது. இமாம் மஹ்தி (அலை) அவர்களும் தம்முடைய 'ஹகீகத்துல் வஹி' என்னும் நூலில் இறைவன், தமக்கு நான்கு ஆண்மக்களை வழங்கியதற்காகவும், **பின்னாளில் பிறக்கவிருக்கும் ஒரு பேரக் குழந்தையைப் பற்றிய முன்னறிவிப்பை வழங்கியதற்காகவும்** அந்த இறைவனுக்கு நன்றி கூறுகிறார்கள். இந்த முன்னறிவிப்புகள் அனைத்தும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபாவாகிய ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களுக்கு 1909ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் நாள் பிறந்த ஓர் ஆண் குழந்தையின் மூலம் நிறைவேறின. அந்தக் குழந்தைதான் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹுத்தஆலா) அவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் முஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் 1909 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ஆம் நாள் தமது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்:

''இறைவன் என்னிடம் கூறியிருக்கிறான். அதாவது அவன் எனக்கு ஓர் ஆண்மகவை வழங்குவான். **அவர் மார்க்கத்தின் 'நாஸிர்' (உதவியாளர்) ஆகவும்,** இஸ்லாத்தின் சேவைக்காகத் தம்மை அர்ப்பணித்தவராகவும் விளங்குவார். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 4 பக்கம் : 320)

## கல்வி

மிர்ஸா நாஸிர் அஹ்மத் அவர்களின் ஆரம்பக் கல்வி மார்க்கம் சார்ந்ததாகவும் உலகியல் சார்ந்ததாகவும் அமைந்திருந்தது. தமது தந்தையாரின் வழிகாட்டலின்படி 1922 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாள் தமது 13 ஆவது வயதில் திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்து ஹாஃபிஸ் பட்டம் பெற்றார்கள். அன்னாரின் தந்தையார் தமது மகனின் மார்க்கக் கல்வியில் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். அந்த விருப்பத்தை நிறைவேற்றும் விதத்தில் அவர்கள் காதியானிலுள்ள அஹ்மதிய்யா மதரஸாவில் சேர்ந்து பயின்று 1929ஆம் ஆண்டு மவ்லவி ஃபாஸில் பட்டம் பெற்றார்கள். அதன் பிறகு ஆங்கிலக் கல்வி கற்பதற்காக லாஹூரிலுள்ள அரசுக் கல்லூரியில் சேர்ந்து பயின்று 1934ஆம் ஆண்டு B.A. பட்டம் பெற்றார்கள்.

1934 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ஆம் நாள் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் பேத்தியும், நவாப் முபாரகா சாஹிபா அவர்களின் மூத்த மகளுமான ஹஸ்ரத் செய்யிதா மன்சூரா பேகம் சாஹிபா அவர்களுடன் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் அவர்களின் திருமணம் நடைபெற்றது. தமது திருமணத்திற்கு ஒரு மாதத்திற்குப்பின் 1934 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6ஆம் நாள் மேல் படிப்புக்காக இங்கிலாந்து சென்றார்கள். 1938 ஆம் ஆண்டு வரை அங்கேயே தங்கிப் படித்து வந்தார்கள்.

இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்ஃபோர்டு பல்கலை கழகத்தைச் சேர்ந்த பால்லியோல் கல்லூரியில் சேர்ந்து பயின்று ஆக்ஸ்ஃபோர்டு பல்கலை கழகத்தின் முதுகலைப் பட்டம் M.A. பெற்றார்கள்.

## மார்க்கப் பணி

1938 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமது சொந்த ஊரான காதியான் திரும்பினார்கள். அங்கு அவர்கள்

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மார்க்கக் கல்வி நிறுவனமான 'மதரஸா அஹ்மதிய்யா'வின் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்கள். 1939ஆம் ஆண்டு அக்கல்லூரியின் முதல்வராகப் பதவியேற்றார்கள். 1944ஆம் ஆண்டு முதல் 1965 ஆம் ஆண்டு வரை முதலில் காதியானிலும் பிறகு ரப்வாவிலும் செயல்பட்ட தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றினார்கள்.

பல ஆண்டுகள் பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிமன்றக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

1939ஆம் ஆண்டு முதல் 1949ஆம் ஆண்டுவரை அஹ்மதிய்யா இளைஞர் அமைப்பான குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவராகப் பொறுப்பேற்றுத் திறம்படச் செயல்பட்டார்கள். 1949ஆம் ஆண்டு முதல் 1954ஆம் ஆண்டுவரை இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவராகப் பணியாற்றினார்கள். அக்காலத்தில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அவ்வமைப்பின் துணைத் தலைவராகப் பணியாற்றினார்கள்.

இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின் காரணமாக அவர்கள் 1947ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் நாள் தமது குடும்பத்தாருடன் காதியானிலிருந்து இடம் பெயர்ந்து பாகிஸ்தானிலுள்ள ரப்வாவில் குடியேறினார்கள்.

1953 ஆம் ஆண்டு அஹ்ரார் இயக்கத்தினர் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கெதிராகக் கலவரத்தைத் தூண்டினர். அப்போது ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்தது. 1953ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் நாள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்.

1954ஆம் ஆண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முதியோர் அமைப்பான மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் தலைவராகப் பொறுப்பேற்றார்கள். 1955ஆம் ஆண்டு மே மாதம் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களால் பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மத்திய ஆட்சி மன்றக் குழுவான சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தலைவராக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்படும் வரை அந்தப் பொறுப்பில் இருந்தார்கள்.

## கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்படுதல்

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபா (ரலி) தமது கிலாஃபத் காலத்தில் கலீஃபாக்களைத் தேர்ந்தெடுப்பதற்கென ஒரு தேர்வுக் குழுவை அமைத்தார்கள். கலீஃபாவைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிமுறைகளையும் வடிவமைத்தார்கள். அன்னார் (ரலி) 1965 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 7,8 ஆகிய தேதிகளுக்கு இடைப்பட்ட நள்ளிரவில் வஃபாத் ஆனார்கள். எனவே நவம்பர் மாதம் 8ஆம் நாள் இஷா தொழுகைக்குப் பிறகு இரவு 7.30 மணியளவில் தேர்வுக் குழு பாகிஸ்தானிலுள்ள ரப்வா நகரில் அமைந்துள்ள முபாரக் பள்ளிவாசலில் கூடியது. சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் செயல் இயக்குநர் ஹஸ்ரத் மிர்ஸா அஸீஸ் அஹ்மத் அவர்கள் அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள். ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட விதிமுறைகளின்படி முதலில் உறுப்பினர்கள் அனைவரும், கிலாஃபத் அமைப்புக்குக் கட்டுப்படுவதாக உறுதி எடுத்துக் கொண்டனர். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மூத்த மகனாக ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹி) அவர்கள் மூன்றாவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். உறுப்பினர்கள் அனைவரும் பைஅத் உடன்படிக்கையை அவர்களின் திருக்கரங்களில் புதுப்பித்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அங்கு கூடியிருந்தவர்கள் மத்தியில் ஓர் உரை நிகழ்த்தினார்கள். பிறகு **மஸ்ஜித் முபாரக்கிற்கு வெளியில் கூடியிருந்த ஏறத்தாழ 5000 பேர் அவர்களின் கரங்களில் பைஅத் செய்தார்கள்.** நவம்பர் 9 ஆம் தேதி மாலை 4.45 மணிக்கு அவர்கள் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகையை நடத்தி வைத்தார்கள்.

## கிலாஃபத் காலத்தின் சாதனைகள்

## ஃபஸ்லே உமர் திட்டம்

ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கிலாஃபத் பதவியை ஏற்றுக் கொண்டதும் முதலில் எடுத்த நடவடிக்கைகளுள் முக்கியமானது 'ஃபஸ்லே உமர் அறக்கட்டளை' பற்றிய அறிவிப்பாகும். இந்தத் திட்டத்தின் பணி ஜமாஅத்தில் ஏற்கனவே இருக்கும் எந்த ஓர் அமைப்பின் பணியையும் ஏற்றுச் செய்வது அல்லது அவற்றின் பணிகளில் குறுக்கிடுவது அன்று. ஜமாஅத்தின் அமைப்புகளில் ஏதாவது ஓர் அமைப்பு தாம் ஏற்றுக் கொண்ட ஒரு பணியை அல்லது திட்டத்தை ஆள் பற்றாக்குறை காரணமாகவோ, நிதிப் பற்றாக்குறை காரணமாக வோ நிறைவேற்ற முடியவில்லையென்றால் இந்தத் திட்டத்தின் உதவியைக் கோரலாம்.

இந்தத் திட்டத்திற்கென உருவாக்கப்பட்ட நிதிக்கு ஆரம்ப முதலீடாக இருபத்தைந்து இலட்சம் ரூபாய் வழங்கும்படி ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஜமாஅத் உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்கள். இந்தத் திட்டத்தின் ஆரம்பமே அருளுக்குரியதாக இருந்தது. அவர்களின் வேண்டுகோளை ஏற்று ஒரு குறுகிய காலத்தில் ஜமாஅத் உறுப்பினர்கள் வழங்கிய நிதியே முப்பத்தி நான்கு இலட்சம் ரூபாய்.

இந்தத் திட்டத்தின் நோக்கம் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் நினைவைப் போற்றும் விதத்தில் அவர்களுடைய விரிவுரைகளின் மூலம் திருக்குர்ஆன் ஞானத்தைப் பெற்றுக் கொள்வதும், அவர்களுடைய நூல்களையும், சொற்பொழிவு களையும் கற்பதும், அவர்களுடைய கவிதைகளின் ஆழத்தைப் புரிந்து கொள்வதும், அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்புகளையும், திட்டங் களையும் பற்றித் தெரிந்து கொள்வதும் ஆகும்.

இந்த அமைப்பின் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்களுள் ஒன்று ஜமாஅத் உறுப்பினர்கள் மத்தியில் ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்ப்பதாகும். இந்தத் திட்டத்தின்படி இந்த அமைப்பால் அறிவிக்கப்படும் தலைப்பின் கீழ் ஆராய்ச்சி செய்து சமர்ப்பிக்கப்படும் ஆய்வறிக்கைகளில் சிறந்த ஐந்திற்கு ஆண்டுதோறும் தலா ரூ.1000/- வீதம் பரிசளிக்கப்பட்டது.

இந்தியா - பாக் பிரிவினைக்குப்பின் பாகிஸ்தானில் காடுமேடாகக் கிடந்த நிலப்பகுதி சீரமைக்கப்பட்டு அங்கு 'ரப்வா' எனும் நகரம் உருவாக்கப்பட்டது. அது ஜமாஅத்தின் தலைமையாகவும் அறிவிக்கப்பட்டது. அப்போது அங்கு ஒரு சிறந்த நூல் நிலையத்தின் தேவை உணரப்பட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைமையகத்தில் ஒரு சிறந்த நூல் நிலையம் அமைக்கப்பட வேண்டும் என ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற மஜ்லிஸே முஷாவிரத் எனும் ஆலோசனைக் கூட்டத்தில் அறிவித்தார்கள். அன்றைய சூழலில் அத்தகைய நூல் நிலையத்தை அமைப்பதற்கான நிதி ஆதாரம் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவுக்கு இல்லாமல் இருந்தது. நூல் நிலையத்திற்கான கட்டடங்களைக் கட்டுவதற்கும், ஒரு சிறந்த நூல் நிலையத்திற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கும் ஃபஸ்லே உமர் அமைப்பு முன்வந்தது. அந்த வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் நாள் நூல்நிலையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அந்தப் பணி சிறப்பாக முடிக்கப்பட்டு சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவிடம் ஒப்படைக்கப் பட்டது. கிலாஃபத் நூல் நிலையம் 1971 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 3ஆம் நாள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அந்த நூல் நிலையத்தில் இன்று 1,00,000க்கும் அதிகமான சிறந்த நூல்களும், அரிய கையெழுத்துப் பிரதிகளும், குழந்தைகள் பிரிவும், அறிவியல் கண்காட்சியும், நிர்வாக அலுவலகமும் உள்ளன. கட்டுமானச் செலவுகளோடு நூல் நிலையத்திற்குத் தேவையான மேஜை, நாற்காலி, புத்தக அலமாரிகள் ஆகியவற்றிற்கான செலவையும், நூல்கள் வாங்குவதற்கான செலவையும், 'ஃபஸ்லே உமர்' அமைப்பே ஏற்றுக் கொண்டது.

### விருந்தினர் விடுதிகள்:

ஜமாஅத்தின் உலகளாவிய வளர்ச்சியோடு ரப்வா நகருக்கு வரும் விருந்தினர்கள் எண்ணிக்கையும் நாளுக்குநாள் அதிகரித்தது. ஆண்டு தோறும் நடைபெறும் மாநாட்டுக் காலங்களில் அந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகியது. தஹ்ரீக்கே ஜதீத் அமைப்பு தனது நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் கட்டியபோது அத்துடன் விருந்தினர் விடுதிகளையும் கட்டியது. அந்த விடுதிகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வந்தன. இருந்த போதிலும், விருந்தினர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே சென்றதால் அந்த விடுதிகள் போதுமானவையாக இல்லை. இன்னும் அதிகமான விடுதிகளின் தேவை அதிகமாக உணரப்பட்டது. வெளிநாட்டிலிருந்து வரும் விருந்தினர் களுக்கெனத் தனியாக ஒரு பெரிய விடுதி கட்டப்பட வேண்டும் எனக் கருதப் பட்டது.

அப்போதும் தேவைக்கேற்றபடி வசதிகளோடு கூடிய ஒரு விருந்தினர் விடுதியைக் கட்டித்தர 'ஃபஸ்லே உமர்' அமைப்பு முன் வந்தது. இந்த வேண்டுகோளும் தஹ்ரீகே ஜதீத் அமைப்பால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த விடுதியும், இதுபோல் தேவைக்கேற்றபடி இன்னும் பல விடுதிகளும் 'பஸ்லே உமர்' அமைப்பால் கட்டி முடிக்கப்பட்டன.

### வெளியீடுகள்

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் சொற்பொழிவுகளின் தொகுப்பான 'குத்பாத்தே மஹ்மூத்' என்னும் நூலை வெளியிடும் பொறுப்பையும் 'ஃபஸ்லே உமர்' அமைப்பு செய்து முடித்தது. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நூல்களை குறைந்த விலையில் விற்பனை செய்யும் நூல் விற்பனை நிலையம் ஒன்றையும் 1981 ஆம் ஆண்டு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ரப்வா நகரில் திறந்து வைத்தார்கள்.

### வக்ஃபே ஆர்ஸி திட்டம்:

1966ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் நாள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் 'வக்ஃபே ஆர்ஸி' என்னும் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். வக்ஃபே ஆர்ஸி என்றால் ஒருவர் தற்காலிகமாக தமது நேரத்தைத் தியாகம் செய்தல் என்று பொருளாகும். இந்தத் திட்டத்தில் பங்கெடுப்போர் குறைந்த பட்சம் இரண்டு வாரங்களாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் தமது நேரத்தைச் செலவு செய்து மார்க்கப் பணியாற்ற வேண்டும். திருக்குர் ஆனைக் கற்பிப்பதும், ஜமாஅத் உறுப்பினர்கள் மார்க்க அறிவை வளர்ப்பதும் ஆகும்.

### பள்ளிவாசல் அமைத்தல்

1967ஆம் ஆண்டு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஐரோப்பியச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்கள். இந்தப் பயணத்திற்காக 1967ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6ஆம் நாள் ரப்வாவிலிருந்து புறப்பட்டார்கள். அவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 24ஆம் நாள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு மீண்டும் ரப்வா திரும்பினார்கள். ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஹாலந்து, டென்மார்க், இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று வந்தார்கள். இந்தப் பயணத்தின்போது சிறிது காலம் இங்கிலாந்திலுள்ள லேக் மாவட்டத்தில் தங்கினார்கள். **அவர்கள் அங்கு ஆற்றிய ஆங்கில உரைகளின் உயரிய நடையையும் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைகழகத்தில் பயின்றவர்களுக்கே உரிய ஆங்கில உச்சரிப்பையும் கண்டு உள்ளூர் மக்கள் பாராட்டினர்.** டென்மார்க்கின் தலைநகரான கோப்பன்ஹேகன் நகரில் முற்றிலும் அஹ்மதிப் பெண்களின் நிதிப் பங்களிப்பின் மூலம் கட்டப்பட்ட முதல் பள்ளி வாசலை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் திறந்து வைத்தார்கள்.

ஒரே நேரத்தில் 1,50,000 பேர் தொழக்கூடிய விதத்தில் ரப்வா நகரில் கட்டப்பட்ட மிகப் பிரம்மாண்டமான அல் அக்ஸா பள்ளிவாசலை 1972ஆம்ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் ஹஸ்ரத்

மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

ஸ்வீடனிலுள்ள கோதன்பர்க் நகரில் கட்டப்பட்ட பள்ளிவாசலை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் 1976ஆம் ஆண்டு திறந்து வைத்தார்கள்.

## நுஸ்ரத் ஜஹான் திட்டம்

ஆப்பிரிக்கா கண்டத்திற்குச் சென்ற முதல் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹி) அவர்கள் ஆவார்கள். அவர்கள் 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் நாள் ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு அங்கு வாழ்ந்த அஹ்மதிகளின் நிலைமைகளைப் பற்றியும் அவர்கள் மேலும் முன்னேறுவதற்கான வாய்ப்புகளைப் பற்றியும் நேரில் கண்டறிந்தார்கள்.

அவர்கள் கானா, நைஜீரியா, ஐவரி கோஸ்ட், காம்பியா,சிராலியோன் போன்ற நாடுகளுக்குச் சென்றார்கள். இந்தப் பயணத்தின் போதும், இதைத் தொடர்ந்து மேற்கொண்ட பயணத்தின்போதும், அந்நாடுகளிலுள்ள ஆட்சித் தலைவர்களோடு நெருக்கமான நீண்டகாலத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்கள். அந்நாட்டுத் தவைர்கள் அவர்களிடம் துஆவுக்காக வேண்டிக் கொண்டார்கள். லைபீரியாவில் ஒரு நீண்ட காலம் ஜனாதிபதியாக இருந்து வந்த திரு. வில்லியம் V.S.டப்மேன், நைஜீரியாவின் யாக்கூபு கோவன் போன்றவர்களுடன் அவர்களுக்கு இருந்து வந்த தொடர்பு குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயணத்தின் முடிவில் அவர்கள் இங்கிலாந்து சென்றார்கள். அங்கு இங்கிலாந்திலுள்ள எல்லா ஜமாஅத்துகளின் உறுப்பினர்களும் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் அவர்கள் உரையாற்றினார்கள். அந்த உரையில் அவர்கள் தமது ஆப்பிரிக்கப் பயணத்தின் போது பெற்ற அனுபவங்களினால் அவர்கள் உரையாற்றினார்கள். அந்த உரையில் அவர்கள் தமது ஆப்பிரிக்கப் பயணத்தின்போது பெற்ற அனுபவங்களினால் அவர்களுக்கு ஏற்பட்ட எண்ணங்களையும், மனிதாபிமான அடிப்படை யில் அங்கு மேற்கொள்ள வேண்டிய பணிகளைப் பற்றியும் குறிப்பிட்டார்கள்.

அதைத் தொடர்ந்து இறைவழிகாட்டலின் அடிப்படையில் தமது மனதில் உதித்த ஒரு திட்டத்தைப் பற்றி அறிவித்தார்கள். அத்திட்டத்தின்படி ஆப்பிரிக்காவிலுள்ள நாடுகளில் வாழ்ந்த மக்களுக்கு மிகவும் தேவைப்பட்ட பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மருத்துவ நிலையங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றை அதிகமான அளவுக்கு நிர்மாணிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்கள். இந்தத்திட்டத்தின் கீழ் அடுத்த மூன்றாண்டு களுக்குள் மேற்கொள்ளத் தாம் எண்ணியிருக்கும் பணிகளை நிறைவேற்ற ஒரு இலட்சம் ஸ்டெர்லிங் பவுண்ட்ஸ் தேவைப்படும் என்று குறிப்பிட்டார்கள்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அதிக காலதாமதம் காட்டமுடியாது என்பதால் அதற்குத் தேவையான நிதியில் கணிசமான ஒரு தொகையை அதிவிரைவில் வழங்கும்படி ஜமாஅத் உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்கள். இந்தத் திட்டம்தான் **நுஸ்ரத் ஜஹான் திட்டம்** என்று அழைக்கப்படுகிறது.

இங்கிலாந்திலுள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் அன்பர்கள் அங்கு வாழ்ந்த அனைத்து அஹ்மதிகளின் வீடுகளுக்கும் சென்று நுஸ்ரத் ஜஹான் திட்டத்திற்கென நிதி திரட்டினர். ஆரம்பத்திட்ட மதிப்பீடான ஒரு இலட்சம் பவுண்ட்ஸ் என்னும் இலக்கு விரைவிலேயே எட்டிவிட்டது. இதுவரை குறிப்பிட்டது இந்தத் திட்டத்திற்குத் தேவைப்பட்ட நிதித்தேவை மட்டும்தான்.

மேற்கு ஆப்பிரிக்காவில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சார்பில் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவிருந்த மருத்துவமனைகள், கல்விநிலையங்கள் ஆகியவற்றில் பணியாற்றப் மருத்துவர்களும், பிற மருத்துவப் பணியாளர்களும், ஆசிரியர்களும் பெருமளவில் தேவைப்பட்டனர். இதற்கென அறிவிக்கப்பட்ட ''மாபெரும் முன்னேற்றத் திட்டம்'' Leap Forward

Scheme என்ற திட்டத்தின்கீழ் ஆப்பிரிக்காவில் நிறுவப்படும் கல்வி நிலையங்களிலும், மருத்துவமனைகளிலும் பணியாற்ற விருப்பத்துடன் முன்வருமாறு ஜமாஅத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும், மருத்துவர்களுக்கும் 1970ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் தேதி வேண்டுகோள் விடுத்தார்கள். போதுமான எண்ணிக்கையில் விருப்பம் தெரிவிப்போர் கிடைக்கவில்லை என்றால் தாம் தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்கள் அங்கு செல்ல தயாராக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். தாம் அங்கு குறைந்தபட்சம் இருபத்தைந்து மருத்துவ நிலையங்களையும் எழுபது - எண்பது கல்வி நிலையங்களையும் அமைத்துத்தருவதாக வாக்குறுதி அளித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்கள்.

**1972ஆண்டு இறுதிக்குள் அங்கு (மேற்கு ஆப்பிரிக்காவில்) இத்திட்டத்தின் கீழ் 16 புதிய மருத்துவமனைகளும், 13 மேல்நிலைப்பள்ளிகளும் அமைக்கப்பட்டு முழுமையாகச் செயல்படத் தொடங்கின.** இந்த மருத்துவமனைகள் தாமாகவே பல்கிப் பெருகுகின்ற அளவுக்கு அவற்றின் செயல்பாடுகள் சிறப்பாக அமைந்தன. தேவையுடைய நோயாளிகளுக்கு இலவசமாக மருத்துவ வசதிகள் செய்து தரப்பட்டன. இருந்தபோதிலும் இந்த மருத்துவமனைகள் மூலம் கிடைத்த வருமானத்தின் மூலம் அந்தந்த மருத்துவமனை களின் விரிவாக்கத்திற்குத் தேவையான கட்டடங்கள் கட்டப் பட்டதுடன் புதிய மருத்துவ நிலையங்களும் அமைக்கப்பட்டன.

இந்தத் திட்டத்திற்குக் கிடைத்த வெற்றியின் காரணமாக முதலில் மூன்றாண்டுகளுக்கு மட்டும் அறிவிக்கப்பட்ட இத்திட்டம் பின்னர் நிரந்தரத் திட்டமாக அறிவிக்கப் பட்டது.

## அஹ்மதிய்யா நூற்றாண்டு நிதி

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நூற்றாண்டுவிழா 1989ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற இருந்தது. இந்த நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் நடைமுறைகளைப்பற்றி 1973ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி மஹுல்லாஹ்) அவர்கள் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். அந்தக் கொண்டாட்டங் களுக்கென நூற்றாண்டு விழா நிதி ஒன்றை ஏற்படுத்தினார்கள். அந்த நிதியின் முக்கியமான நோக்கங்களாக அவர்கள் எடுத்து வைத்த திட்டங்கள் இவை :

1. இஸ்லாத்தின் தூதுச்செய்தியை உலகெங்கும் எட்டவைத்தல்
2. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் பிரசார நிலையங்களை நிறுவுதல்
3. உலகின் 100 மொழிகளில் இஸ்லாமியப் பிரசுரங்களை வெளியிடுதல்
4. பாகிஸ்தானில் ஒரு நவீன அச்சகத்தை நிறுவுதல்
5. ஆப்பிரிக்காவில் உள்ள ஏதாவது ஓர் ஊரில் வானொலி நிலையம் அமைத்தல்
6. உலகில் ஆறுமொழிகளில் திருக்குர்ஆனின் மொழி பெயர்ப்புகளை வெளியிடுதல்

இந்தப் பணிகளுக்கான செலவுக்காக 25 இலட்சம் ரூபாய் நிதி வழங்கும்படி ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஜமாஅத் உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் இதற்கென ஜமாஅத் உறுப்பினர்கள் அளித்த நன்கொடை வாக்குறுதியோ கேட்டுக்கொண்டதைப் போல் நான்கு மடங்காக இருந்தது.

நூற்றாண்டு விழாத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் கீழ்வருமாறு:

1. ஸ்வீடனில் ஒரு பள்ளிவாசலும் பிரச்சார நிலையமும் கட்டப்பட்டன.
2. காஷ்மீரில் உள்ள ஸ்ரீநகரில் ஒரு பெரிய பள்ளி வாசலும், பிரசார நிலையமும் கட்டப்பட்டன.
3. பெருமளவில் இஸ்லாமியப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.
4. நார்வேயிலும், ஸ்பெயினிலும் பள்ளி வாசல்கள் கட்டப்பட்டன.

5. கல்வியில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு உதவித்தொகையும், பதக்கங்களும் வழங்கப்பட்டன.
6. ரப்வாவில் நூற்றாண்டு விழா அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டது.

1976ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி மஹுல்லாஹ்) அவர்கள் அமெரிக்காவிலும், கனடாவிலும் உள்ள ஜமா அத்துகளுக்குப் பயணம் மேற்கொண்டார்கள்.

## இலண்டன் மாநாடு

மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் கிலாஃபத் காலத்தில் நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்று 1978ஆம் ஆண்டு இலண்டன் மாநகரில் நடத்தப்பட்ட மாநாடாகும். இந்த மாநாட்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தலைப்பு ‘சிலுவை மரணத்திலிருந்து இயேசு காப்பாற்றப்படுதல்’ என்பதாகும். இந்த மாநாடு 1978 ஆண்டு ஜூன் மாதம் 2ஆம் நாள் முதல் 4ஆம் நாள் வரை இலண்டன் மாநகரின் கென்ஸிங்ஸ்டன் பகுதியில் உள்ள ராயல் காமன்வெல்த் இன்ஸ்டிடியூட் என்னும் இடத்தில் நடைபெற்றது. இங்கிலாந்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இந்த மாநாட்டிற்கான ஏற்பாடு செய்தது. **உலகின் முக்கிய மார்க்கங்களைச் சேர்ந்த அறிஞர்கள் இயேசுவின் சிலுவைச் சம்பவம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்தார்கள். இயேசுவின் சிலுவைச் சம்பவம், மற்றும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளையும், உண்மைகளையும் முதன்முதலில் உலகிற்கு எடுத்துச்சொன்ன அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தூய நிறுவர் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் அரிய கருத்துகளும் இந்த மாநாட்டில் எடுத்து வைக்கப்பட்டன.** சௌத்ரி சர் முஹம்மத் ஸபருல்லாஹ்கான் அவர்களும், அரிய சொற்பொழிவாற்றினார். இந்த மாநாட்டின் முத்தாய்ப்பாக ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி மஹுல்லாஹ்) அவர்களும் உரையாற்றி னார்கள். அறிஞர் பெருமக்கள் பலரும், பெருந்திரளான பொதுமக்களும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். உலகின் புகழ்பெற்ற பல பத்திரிகைகள் இந்த மாநாட்டு நிகழ்ச்சிகளை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

## வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்பெயின் பள்ளித் திறப்பு

மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் கிலாஃபத் காலத்தில் நடைபெற்ற மற்றொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஸ்பெயின் நாட்டில் பள்ளிவாசல் திறக்கப்பட்டதாகும். இஸ்லாத்தின் ஆரம்ப கால வரலாற்றில் சுமார் 700 ஆண்டுகாலம் ஸ்பெயின் நாட்டில் இஸ்லாம் ஏற்றம்பெற்று விளங்கியது. திருக்குர்ஆனின் உயரிய போதனைகளிலிருந்தும், தத்துவங்களி லிருந்தும் அதன் அறிவியற் செய்திகளிலிருந்தும் அந்நாடு பயன் பெற்று ஐரோப்பா முழுவதிலும் புகழ்பெற்று விளங்கியது. பிறகு, ஸ்பெயினின் ஆட்சி கிறிஸ்தவர்களின் கைக்கு மாறியது. ஸ்பெயினில் இஸ்லாமிய ஆட்சி சிறந்து விளங்கிய அடையாளமே தெரியாமல் ஆனது. இவ்வாறு 700 ஆண்டுகாலம் கழிந்தது. இந்நிலையில்தான் 1970ஆம் ஆண்டு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஸ்பெயின் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்கள். ஸ்பெயினில் இஸ்லாம் அடைந்திருந்த வீழ்ச்சியைக் கண்டு வேதனையுற்றார்கள். மீண்டும் ஸ்பெயின் நாட்டு மக்களுக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு இறைவனிடம் மனமுருகிப் பிரார்த்தனை செய்தார்கள். அதன் விளைவாக 700 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் ஒரு பள்ளி வாசலைக் கட்டுகின்ற நல்ல வாய்ப்பை இறைவன் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு வழங்கினான். 1980ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ம் நாள் கார்டோபா நகருக்கு அருகில் உள்ள பெட்ரோபாத் என்னும் இடத்தில் பள்ளி வாசலுக்கான அடிக்கல் நாட்டினார்கள்.

அந்தப் பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டுவிழாவில்தான் 'Love For All; Hatred For None' (எல்லோரிடத்தும் அன்பு; யார்மீதும் வெறுப்பில்லை) என்ற முழக்கத்தை வெளியிட்டார்கள். இதுவே, பின்னாளில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கொள்கை முழக்கமானது. இவ்வாறு ஹிஜ்ரி 14ஆம் நூற்றாண்டின் முதல் பள்ளி வாசலை ஸ்பெயினில் கட்டுகின்ற அரும்பணியை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) நிறைவேற்றினார்கள்.

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு எதிரான சட்டத்திருத்தம்

பாகிஸ்தான் ஆட்சியாளர்களால் 1974ம் ஆண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அரசியல் சாசன திருத்தம் கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் கிலாஃபத் காலத்தில் நடைபெற்ற மற்றுமொரு முக்கியமான நிகழ்வாகும். 1953ம் ஆண்டு முதலே பாகிஸ்தானில் அஹ்ரார் அமைப்பைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வந்தனர். அதன் உச்ச கட்டமாக 1974ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6ஆம் நாள் பாகிஸ்தான் அரசியல் சாசனத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதன்படி பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகள் முஸ்லிமல்லாத சிறுபான்மையினர். பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகள் அந்நாட்டு அங்கீகாரத்தை இழந்தனர். இச்சட்ட சீர்த்திருத்தத்தை சாக்காகக் காட்டி மீண்டும் ஒருமுறை அஹ்மதிகளுக்கெதிரான வன்முறை கட்டவிழ்த்துவிடப் பட்டது. இந்த வன்முறைகளையெல்லாம் பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி பொறுமையோடும், சகிப்புத்தன்மையோடும் தியாக உணர்வோடும், இன்முகத்தோடும் ஏற்று வெற்றி கண்டனர். சட்ட சீர்திருத்தம் தொடர்பாக நடைபெற்ற விசாரணையில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் நேரிடையாக கலந்து கொண்டு விளக்கமளிக்க வேண்டுமென்று பாகிஸ்தான் அரசு கேட்டுக் கொண்டது. இந்த அழைப்பை ஏற்று ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் பாகிஸ்தான் தேசிய அசெம்பிளியால் அமைக்கப்பட்ட குழுவின்முன் ஆஜராகி அவர்கள் எழுப்பிய கேள்விகள் அனைத்திற்கும் ஆணித்தரமான - அறிவுப்பூர்வமான - பதிலளித்தார்கள். இந்த குழுவின்முன்பு விளக்கமளிக்கும் போது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுக்கு உதவி செய்வதற்காக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கீழ்க்கண்ட நான்கு அறிஞர்கள் கலந்துக்கொண்டனர்.

1. ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் (பின்னாளில் ஜமாஅத்தின் நான்காவது கலீஃபா ரஹிமஹுல்லாஹ்)
2. மவ்லான அபுல்அதா ஜலந்தரி (ரலி)
3. ஷேக் முஹம்மத் அஹ்மத் மஸ்ஹர் (முன்னாள் ஃபைஸலாபாத் மாவட்ட அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர்)
4. மவ்லானா தோஸ்த் முஹம்மத் ஷாஹித் (அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வரலாற்று அறிஞர்)

பாக். அரசு, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மீது சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் அறிஞர்கள் கொடுத்த பதில்களை பாக்.அரசு பொதுமக்களுக்கு மத்தியில் வெளியிட வேண்டும் என பலமுறை ஜமாஅத் சார்பாக கேட்டுக்கொள்ளப்பட்டும் இந்தக்குழுவின் அறிக்கையை அது வெளியிடவே யில்லை. இதிலிருந்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் எதிரிகள் எழுப்பிய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளின் வெற்றுத்தன் மையை புரிந்து கொள்ள முடியும்.

**National Watch Company**
Opposite to Bus Stand
Somanur, Tiruppur

**Chennai Hardwares**
241, Aroct Road, Chennai 600 026.
Ph : 2473 5373

**பிறபணிகள்**

1965ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் நாள் ஏழைகள், அநாதைகள், கைதிகள் ஆகியவர்களுக்கு உதவி செய்வதின் முக்கியத்துவத்தை ஜமாஅத் உறுப்பினர்களுக்கு வலியுறுத்தி மூடப்பழக்க வழக்கங்களைக் கண்டித்து உரையாற்றினார்கள். அஹ்மதிகள் அனைவரும் பள்ளி இறுதி வகுப்புவரை கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறினார்கள். அஹ்மதிகள் தங்களுக்கெதிராக இழைக்கப்படும் கொடுமைகளையும், அநீதி களையும் இன்முகத் தோடு எதிர்க் கொள்ள வேண்டுமென்று 1974ம் ஆண்டு ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்கள். இவர்களின் கிலாஃபத் காலத்தில்தான் உலகின் உயரிய **விருதான நோபல் பரிசை பெறும் முதல் முஸ்லிம் அறிவியல் அறிஞர் என்ற பெருமையை அஹ்மதி முஸ்லிமான டாக்டர். அப்துஸ்ஸலாம் அவர்கள் 1979ம் ஆண்டு பெற்றார்கள்.** இந்த விருதினை பெறும் முதல் பாகிஸ்தானியும் அவர்களே ஆவார்கள்.

இவ்வாறு சீரிய முறையில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை வழிநடத்திச் சென்ற ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் 1982ஆம் ஆண்டு ஜூன் மாதம் அதிகாலை 0.45 மணிக்கு இஸ்லாமாபாத் நகரில் மாரடைப்பால் மரணம் அடைந்தார்கள். (இன்னாலில்லாஹி வஇன்னாஇலைஹி ராஜிஊன்) அப்போது அவர்களுக்கு வயது 73. அவர்களுடைய ஜனாஸா ரப்வாவிற்கு கொண்டு வரப்பட்டது.

அவர்களின் ஜனாஸா தொழுகையை நான்காவது கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் (ரஹி) முன்னின்று நடத்தினார்கள். கிட்டதட்ட 1,00,000 பேர் ஜனாஸா தொழுகையில் கலந்து கொண்டனர். ரப்வாவில் உள்ள பெஹிஷ்தி மக்பராவில் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் அடக்கஸ்தலத்திற்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

(The Review of Religions) எனும் பத்திரிகை 2008 மார்ச் இதழில் வெளி வந்த கட்டுரையை தழுவி எழுதப் பட்டது.

**தொகுப்பு**
S.S.H. **முஹம்மது லப்பை**

---

**5 ஆம் பக்க தொடர்ச்சி...**

கலீஃபாவாக விளங்கினார்கள். இந்த காலகட்டத்தில் 46 நாடுகளில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கொள்கை பரப்பு நிலையங்கள் நிலைநாட்டப்பட்டன. 146 பேர் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களாக வெளிநாடுகளில் அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் பணியில் ஈடுபட்டனர். 16 உலக மொழிகளில் திருக்குர்ஆன் மொழியாக்கம் வெளியிடப்பட்டன. 74 பள்ளிக் கூடங்களும், 28 மார்க்க பாடசாலைகளும் 17 மருத்துவமனைகளும் உருவாக்கப்பட்டன. ஏறக்குறைய 40 பத்திரி கைகள் வெளியிடப்பட்டன. இவையெல்லாம் 1965 வரையுள்ள நிலவரங்களாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் காலத்தில் இஸ்லாத்திற்குக் கிடைத்த வெற்றிகளைக் கண்டு தாக்கத்திற்குள்ளான அமெரிக்காவைச் சேர்ந்த புகழ் பெற்ற பாதிரி ஸூவேமர் காதியான் வந்து பார்த்துவிட்டு திரும்பிச் சென்ற பிறகு இவ்வாறு குறிப்பிட்டார்:

''இந்த இடம் தேனீக்களின் ஒரு கூடு ஆகும். இஸ்லாமிய தப்லீகிலும், வெளியீட்டிலும் எப்போழுதும் ஈடுபட்டுள்ளது. ரிவியூ ஆஃப் ரிலிஜன்ஸ் என்ற ஆங்கில பத்திரிகை மட்டுமல்லாமல் மேலும் பல பத்திரிகைகள் இங்கிருந்து வெளியாகின்றன. இவர்களுக்கு இலண்டன், பாரிஸ், பெர்லின், ஷிகாகோ, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் கடிதத் தொடர்பு இருக்கின்றது.'' ***(அல்ஃபஸ்ல் 18-08-1925)***

இவ்வாறு முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களைப் பற்றிய முன்னறிவிப்பு மகத்தான முறையில் நிறைவேறியது. மேலும் இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைக்கும், இமாம் மஹ்தி (அலை) அவர்களின் உண்மைக்கும் சான்றாக விளங்குகிறது.

டிசம்பர் இதழ் தொடர்ச்சி...

# அஹ்மதிய்யத் உலகிற்கு வழங்கியது என்ன?

**மவ்லானா அத்தாவுல் முஜீப் ராஷித்**

**துஆ (வேண்டுதல்) ஏற்றுக்கொள்ளப் படுவதற்கான ஆதாரமும் அனுபவமும்**

துஆ ஏற்றுக்கொள்ளப்படுவதென்பது இறைவனது இருப்பிற்கான ஓர் ஆதாரமும் முஃமின்களது ஈமானின் வலுவிற்கான ஒரு வழியுமாகும். நமது இறைவன் உயிருள்ள இறைவன். அவன் அடியார்களின் துஆக்களை செவியுற்று அவற்றிற்கு பதிலுமளிக்கின்றான். பின்பு துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான தித்திப்பான கனிகளையும் வழங்குகிறான் என்ற நற்செய்தியை அஹ்மதிய்யத் உலக மக்களுக்கு வழங்கியது. எவ்வித மாற்றுக்கருத்திற்கும் இடமின்றி மகத்துவத்துடனும் உறுதியுடனும் இவ்விஷயத்தை அஹ்மதிய்யத் உலகத்தின் முன்வைத்தது. அதிகமாகவும் தொடர்ச்சியாகவும் அஹ்மதிய்யத்தின் உலகில் துஆ ஏற்றுக் கொள்ளப் படுவதற்கான உயிருள்ள அடையாளங்கள் எந்த அளவுக்கு வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன வென்றால் இதற்கு நிகரானதை முழு உலகிலும் வேறு எங்கும் காண முடியாது.

அஹ்மதிய்யத் மட்டுமே உலகிற்கு துஆ ஏற்றுக்கொள்ளப் படுவதற்கான உண்மையான ஞானத்தை வழங்கியது. மேலும் அவற்றின் புத்தம் புதிய வெளிப்பாடுகளின் எண்ணற்ற முன்மாதிரிகளை வழங்கியது. உண்மை என்ன வென்றால், இன்று உலகில் நேரடியாகவோ அல்லது பிறரின் மூலமாகவோ துஆ ஏற்றுக்கொள்ளப்படுவதைப் பார்க்காத அல்லது அனுபவம் பெறாத எந்த ஓர் அஹ்மதி குடும்பமும் இல்லை. துஆவின் மீது உறுதியான நம்பிக்கையும் துஆ ஏற்றுக்கொள்ளப்படும் சொந்த அனுபவமும் ஓர் அஹ்மதியின் வாழ்வின் அங்கமாக மாறியுள்ளது. அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு அஹ்மதியும் இதனை நன்றாக அடையாளம் கண்டுள்ளனர். அஹ்மதிய்யத்தின் உலகில் நேசத்துடனும் ஆர்வத்துடனும் தொடர்ச்சியாக ஒவ்வொரு வீட்டிலும் துஆ மற்றும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டதைப் பற்றியும், அதனால் அடைந்த பயன்களையும் பற்றிய பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கும். முழு உலகத்திலும் ஒட்டு மொத்தமாகக் கூட இந்தளவுக்கு பேச்சு நடைபெறுவதில்லை. அஹ்மதிய்ய ஜமாஅத்தில் ஆண்கள் பெண்கள் மட்டுமின்றி சிறிய குழந்தைகளும் இதன் சுவையை அறிந்துள்ளனர். துஆவின் இந்த நிலையும், இதைப்பற்றிய ஞானமும் இந்த அளவிற்கு அனுபவமும் உலகில் வேறு எந்த ஜமாஅத்திற்கும் இவ்வண்ணம் கிடைக்கவில்லை.

துஆ என்பது என்ன? அதன் தாக்கங்கள் மற்றும் அருட்கள் யாவை என்பதைப்பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஞானமிக்க வார்த்தைகளில் கேளுங்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

‘‘ (துஆவாகிய) அது (எதிரிகளை) அழித்து விடக்கூடியதாகும். அது உருக்கக்கூடிய நெருப்பாகும். அது அருளை ஈர்க்கும் காந்த விசையாகும். அது மரணமாகும். ஆனால் இறுதியில் உயிர் தருகின்றது. அது அடித்துச்செல்லும் வெள்ளமாகும். ஆனால் இறுதியில் அது கப்பலாக மாறிவிடுகிறது. ஒவ்வொரு சீர்குலைந்த விஷயமும் அதனால் சீராகும். மேலும் அனைத்து விஷமும் அதனால் இறுதியில் அதை முறிக்கும் மருந்தாகிவிடும்...... இவ்வாறு துஆ புழுதியைப் பொன்னாக்கும் ஓர் இரசாயனமாகும். அது அகத்தின் அசுத்தத்தை நீக்கும் ஒரு நீராகும். அந்த துஆவுடன் ஆன்மா உருகுகின்றது. மேலும் வெள்ளமாக பாய்ந்து ஏக இறைவனின் சந்நிதியில் விழுகிறது.’’ ***(ரூஹானி கஸாயின் இலண்டன் வெளியீடு 1984, தொகுதி 20, லெக்சர் ஸியால் கோட் பக்கம் 20-21)***

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்:

‘‘துஆக்களின் தாக்கம் நீர், நெருப்பின் தாக்கத்தைவிட அதிகமானதாகும். மாறாக இயற்கை காரணிகளில் துஆவைப்போல்

மாபெரும் தாக்கத்தை கொண்டது வேறெதுவுமில்லை''. *(ருஹானி கஸாயின் இலண்டன் பதிப்பு 1984, பாகம் 6, பரக்காத்துத் துஆ பக்கம் 11)*

துஆ எற்றுக்கொள்ளப்படுவற்கான தூய வெளிப்பாடுகளின் தோற்றம் எந்தெந்த விதத்தில் நிகழ்கிறது? இது எவ்வாறான ஓர் ஆழ்கடலென்றால் இதன் ஆழத்தை ஒரு போதும் அளக்கவோ அல்லது இதைப்பற்றி முழுமையாகக் கூறவோ இயலாது. இது ஒவ்வொரு வேளையிலும் பரந்து விரிந்து கொண்டே செல்லும் ஒரு தொடராகும். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வரலாற்றில் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவங்கள் வானின் நட்சத்திரங்களைப் போல் நிறைந்து காணப்படுகிறது. எவற்றைக் கூறுவது? இருப்பினும் ஒருசில உதாரணங்களைக் கூறுகிறேன். அவற்றின் மூலம் அல்லாஹ் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு எவ்வாறான உயிரையும் வாழ்வையும் வியக்கும் அற்புதத்தையும் வழங்கியுள்ளான் என்பதை கணித்து விடலாம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் முன்ஷி அதா முஹம்மது பட்வாரி அவர்களின் சம்பவம் மிகவும் புகழ் பெற்றது. அவருக்கு மூன்று மனைவியர் இருந்தனர். ஆனால் சந்ததிகள் இல்லை. மிர்ஸா சாஹிபின் துஆவினால் எனக்கு நான் விரும்பும் மனைவியின் மூலம் சந்ததி கிடைக்கப் பெற்றால் நான் அஹ்மதியாகி விடுவேன் என அவர் கூறினார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் துஆ செய்தார்கள். அதன் அருளின் விளைவாக அவருக்கு தனது விருப்பத்திற்கேற்ப சந்ததியும், அஹ்மதிய்யத் எனும் செல்வமும் கிடைத்தது. (சீரத்துல் மஹ்தி, காதியான் வெளியீடு 1935, தொகுதி 1, பக்கம் 239-241)

கபூர்தலாவில் அஹ்மதிகளின் பள்ளி வாயிலை அன்னியர்கள் அபகரித்துக் கொண்டனர். நீதிபதியோ அஹ்மதிகளுக்கு எதிராக தீர்ப்பை வெளியிட வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார். ஜமாஅத் தோழர்களின் பதற்றத்தைக் கண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களுக்கு ஆறுதல் வழங்கியவாறு பதற்றமடையாதீர்கள்; நான் உண்மையாளனென்றால் இந்தப்பள்ளிவாயில் உங்களுக்கு கிடைத்தே தீரும் எனக் கூறினார்கள். முதல் நீதிபதி திடீரென மரணமடைந்து விட்டார். பின்பு வந்த புதிய நீதிபதி அஹ்மதிகளுக்கு சாதகமான தீர்ப்பை வழங்கினார். (சீரத்துல் மஹ்தி, காதியான் வெளியீடு 1935, தொகுதி 1, பக்கம் 64)

மவ்லானா ரஹ்மத் அலி (ரலி) அவர்களின் சம்பவமும் மிக பிரபலமானது. இந்தோனேஷியாவில் அவரது மர வீட்டின் அருகே நெருப்பு பற்றிக்கொண்டது. அவரது வீட்டையும் நெருப்பு எரித்து பொசுக்கிவிடும் அபாயம் இருந்தது. முஃமின்களுக்கே உரித்தான உறுதியுடன் அவர் அங்கேயே இருந்து கொண்டு துஆ செய்தவாறு இந்த நெருப்பால் எனக்கும் எனது வீட்டிற்கும் ஒருபோதும் இழப்பை ஏற்படுத்தமுடியாது. ஏனென்றால், 'நெருப்பால் எம்மை பயமுறுத்தாதீர்கள். நெருப்பு எமது அடிமை மட்டுமல்ல; அடிமைகளின் அடிமையுமாகும்' என்று இறைவனால் வாக்குறுதியளிக்கப்பட்ட அந்த மஸீஹின் நெருங்கிய அடிமை நான் என மக்களிடம் கூறினார். இறைவனது அற்புதத்தைப் பாருங்கள். திடீரென மேகம் திரண்டு அடைமழை பெய்து நெருப்பை குளிர வைத்துவிட்டது. உண்மையிலேயே அந்த நெருப்பு காலத்தின் மஸீஹின், அடிமையின் அடிமையாகிவிட்டதை உலகம் பார்த்தது. *(ருஹ்பர்வர் யாதேன். மவ்லவி முஹம்மது ஸித்தீக் அம்ரித்ஸரி. பக்கம் 64, அல்ஃபஸ்ல் 9 டிசம்பர் 1938)*

ஹஸ்ரத் முஃப்தி சாதிக் முகம்மது (ரலி) அவர்கள் 1917 இல் இங்கிலாந்து செல்வதற்காக பயணத்தை துவங்கினார்கள். உலகப் போர் காரணமாக கடற்பயணம் மிக அபாயகரமானதாக இருந்தது. வழியில் கப்பலின் மாலுமி, ஜெர்மன் கப்பல்களின் இலக்கினுள் கப்பல் உள்ளது. அவர்களது இலக்கால் எப்போது கப்பல் மூழ்கும் எனத் தெரியாது என்று அறிவித்தார். பயணிகள் இதைக் கேட்டதும் பயத்தில் பதற்றமடைந்தனர். முஃப்தி சாஹிப் மிக வேதனையுடன் துஆ செய்தார்கள். இரவில் அவர்களது கனவில் ஒரு வானவர் சாதிக்! இந்த கப்பல் பாதுகாப்பாக

சென்றடையும் நம்பிக்கை கொள் எனக் கூறியதைக் கேட்பார்கள். அன்னார் இந்த நற்செய்தியை உடனே பயணிகளிடம் தெரிவித்தார்கள். சூழ்நிலையோ மிகவும் மோசமாக இருந்தது. சுற்றியுள்ள கப்பல்கள் எல்லாம் உருக்குலைந்து அதன் மரத்துண்டுகள் கடலில் நீந்தியவாறு காட்சியளித்தன. ஆனால் முஃப்தி சாஹிப் பயணித்த கப்பலோ பாதுகாப்பாக செல்ல வேண்டிய இடத்திற்கு சென்றடைந்தது. (சாதிக் பைத்தி பாகம் 1, தொகுப்பு முஷ்தாக் அக்தர் லக்னோவி பக்கம் 21-22)

ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸூல் ராஜிகி (ரலி) அவர்கள் பாகல் பூருக்கு ஒரு பிரசார மாநாட்டிற்காக சென்றிருந்தார்கள். திடீரென கருமேகம் சூழ்ந்து பெரும்பெரும் துளியாக மழை பொழியத் துவங்கியது. மாநாட்டின் இடையூறைக் கருத்தில் கொண்டு அவர்கள் மிக உருக்கத்துடன் துஆ செய்தார்கள். பார்த்துக் கொண்டிருக்கும் போதே வானம் தெளிவாகி விட்டது. மாநாடும் வெற்றிகரமாக நடைபெற்றது. (ஹயாத்தே குத்ஸி, பதிப்பு 1954. ஹைதராபாத். தக்கன் பாகம் 3, பக்கம் 25-26)

மவ்லானா நதீர் அஹ்மது முபஷ்ஷிர் அவர்கள் கானாவில் இருந்தார்கள். எதிரிகள் உண்மையில் இமாம் மஹ்தி வந்து விட்டார்களென்றால் பிறகு நில நடுக்கம் வந்திருக்க வேண்டுமே என விஷயத்தை வேறு விதத்தில் கொண்டு சென்றனர். இது உண்மைக்கான அளவு கோலோ அல்லது முன்னறிவிப்போ அல்ல. இருந்தும் அன்னார் பணிவுடன், ஆற்றல் மிக்க இறைவா! நீ உனது வல்லமையின் அடையாளத்தை வெளிப் படுத்துவாயாக என துஆ செய்தார்கள். இயற்கையின் அற்புதத்தைப் பாருங்கள்! ஒரு சில நாள்களுக்குள்ளேயே முழு கானாவின் நிலப்பரப்பும் கடுமையான நிலநடுக்கத்தால் குலுங்கியது. இவ்விஷயம் அதிகமானவர்கள் நேர்வழி பெறுவதற்கு காரணமாக அமைந்தது. (ரூஹ்பர்வர் யாதேன். பக்கம் 77-79)

உயிர்த்துறக்கும் நிலையிலிருந்த நோயாளிகளின் நலம், துன்பங்களிலிருந்து விடுதலை, இழப்பிலிருந்து பாதுகாப்பு மற்றும் துஆக்களின் அருளால் அசாதாரண உதவிகள், ஆதரவுகள் போன்ற சம்பவங்கள் எண்ணிக்கையில் அடங்காதவை. பார்ப்பவர்களும் கேட்பவர்களும் நம்பமுடியாத சம்பவங்களும் உள்ளன. அஹ்மதிய்யத்தின் உலகில் மழைத்துளியாக அனைத்து இடங்களிலும் பொழிந்து கொண்டிருக்கும் இவை உயிருள்ள இறைவனுடைய ஆற்றல்களின் உயிருள்ள அடையாளமாகும். இவை துஆ எற்றுக்கொள்ளப் பட்டதற்கான இறை ஞானங்களாகும். இவை அஹ்மதிய்யத் உலகிற்கு வழங்கியிருக்கும், துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான அடையாளங் களாகும். அவற்றை அஹ்மதிய்யத் உலகிற்கு வழங்கியுள்ளது. இச்சம்பவங்களின் விளைவாக அஹ்மதிகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ள இன்பமும் ஈமானின் வலுவும் மற்றவர்களுக்கு எங்கே கிடைத்துள்ளது?

## முடிவுரை

இவைதான் அஹ்மதிய்யத் உலகிற்கு வழங்கிய செல்வங்களாகும். இவைதான் அஹ்மதிய்யத் வழங்கிய ஆன்மீக அருட்கொடைகளும், அருள்களுமாகும். நிலைத்திருக்கும் இந்த இனிப்பான சந்திப்பு மற்றும் தித்திக்கும் அமிர்தத்தை அஹ்மதிய்யத் நான்கு திசைகளிலும் விநியோகித்துள்ளது. அஹ்மதிய்யத்தின் உயிர் தியாகிகளே! இன்று நீங்கள் இந்த அருட்கொடைகளின் பாதுகாவலர்களாவீர்கள். நம்பி ஒப்படைக்கப்பட்ட இந்த உரிமையை நன்றாக நிறைவேற்றுங்கள். அமைதியிழந்து சோர்வுடன் காணப்படும் மனிதயினத்திற்கு குணமளிக்கும் அமிர்தம் உங்களது கைகளில் தரப்பட்டுள்ளது. உலகம் ஆன்மீக மரணத்தின் விளிம்பில் நிற்கின்றது. உலக மக்களை இன்று இந்த அழிவிலிருந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைகளை தவிர வேறு எவராலும் காப்பாற்ற இயலாது. எனவே ஈருலகத்திற்கும் அருட்கொடையாக விளங்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நன்றியுள்ள அடிமைகளே! எழுந்திருங்கள். வழிகேடு மற்றும் இருளின் வழியில் தடுமாறித்திரியும் மனிதயினத்திற்காக தனது உடல், உள்ளம், உயிர்

**(தொடர்ச்சி 21 ஆம் பக்கம்)**

# ஹஸ்ரத் சவ்தா (ரலியல்லாஹு அன்ஹா)

**மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மனைவியும் நம்பிக்கை கொண்டவர்களின் தாயுமாகிய ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களின் தந்தை ஸமா பின் கய்ஸ் அவர்கள் குரைஷி குலத்தை சார்ந்தவராவார். தாயார் ஷமூர்ஸ் பின்த் கய்ஸ் மதீனாவிலுள்ள பனூநஜ்ஜார் குடும்பத்தைச் சேர்ந்தவராவார்.

ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களுக்கு ஆரம்பகாலத்திலேயே இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் நற்பேறு கிடைத்தது. இவர்களுடைய முதல் திருமணம் தனது சிறிய தந்தையின் மகன் சக்ரான் பின் அம்ர் அர்ஷீ என்பவருடன் நடைபெற்றது. சக்ரான் (ரலி) அவர்களும் ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபியாகும். நற்பேற்றைப் பெற்றிருந்தார். மேலும் ஹப்ஷாவை நோக்கி ஹிஜ்ரத் செல்லும் நற்பேற்றையும் பெற்றார். அந்த ஹிஜ்ரத் பயணத்தில் ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களும் தம் கணவருடன் இருந்தார்கள். பின்னர் அவர்கள் அங்கிருந்து மக்காவிற்கு திரும்பி வந்த போது ஹஸ்ரத் சக்ரான் (ரலி) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். சில அறிவிப்புகளின்படி , ஹஸ்ரத் சக்ரான் (ரலி) அவர்கள் ஹப்ஷாவை நோக்கி ஹிஜ்ரத் செய்யும் பயணத்திலேயே மரணடைந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தன் குழந்தைகளை கவனித்தல், வீட்டுப்பணிகளை செய்தல் ஆகியவற்றைப் பற்றி கவலை ஏற்படுவது ஒரு இயல்பான விஷயமாக இருந்தது. நபித் தோழர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை உணர்ந்தனர். ஹஸ்ரத் ஹவ்லா பின்த் ஹகீம் என்ற ஒரு சஹாபிய்யா மிகவும் மரியாதையுடனும் தைரியத்துடனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்குப் பிறகு மிகவும் துக்கமடைந்துள்ளீர்கள் எனக் கூறினார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஆம், அவர் என் சிறு குழந்தைகளின் தாயாக இருந்தார். குடும்பத் தலைவியாகவும், கண்காணிப்பாளராகவும் இருந்தார் எனக் கூறினார்கள்.

உண்மையிலே ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் தமது வீட்டிற்குத் தேவையான அருமையான ஏற்பாட்டை செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மார்க்கப்பணிகளில் ஈடுபட்டிருப் பதற்காக முழுமையாக நேரம் ஒதுக்கித்தந்திருந் தார்கள். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்கள் இல்லாத குறை உணரப்படுவது இயல்பான விஷயமாக இருந்தது. இந்த வகையில் முஸ்லிம்களின் ஒட்டு மொத்தமான வாழ்க்கைக்காகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மனைவி இல்லாத இந்தக் குறையை நீக்குவது கட்டாயமானதாக இருந்தது. எனவே ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் அனைத்து முஸ்லிம்களின் சார்பாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, மறுமணம் செய்து கொள்ளுமாறு வேண்டினார்கள். அத்துடன் மணம் செய்வதற்கு சில பெண்களையும் ஆலோசனை யாக எடுத்து வைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சற்று அதிக வயதைக் கொண்ட பெண்ணாகிய ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் முதன் முதலில் ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களிடம் சென்று பேசினார்கள். அப்போது ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள், நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது ஈமான் கொண்டுள்ளேன். அன்னாரிடம் பைஅத் செய்துள்ளேன். இதைவிட பெரிய நற்பேறு எனக்கு வேறு என்ன இருக்க முடியும்? எனக் கூறினார். அதன் பிறகு ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களின் தந்தையிடம் சென்று கேட்ட போது, சவ்தாவுக்கு இதைவிட சிறப்பான உறவு வேறு என்ன கிடைக்க முடியும் என்றார். இவ்வாறு மக்காவில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலேயே ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வாழ்க்கை துணைவியாகி வந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களின் சகோதரர் அப்துல்லாஹ்பின் ஸமா இணைவைப்பவராக இருந்தார். அவருக்கு இந்த செய்தி கிடைத்ததும் அலறியவாறு, தன் தலை மீது மண்ணைக் கொட்டிக் கொண்டார். இவர் பிற்காலத்தில் முஸ்லிமாக மாறிய பின்னர், என் சகோதரி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மணம் முடிப்பதை அறிந்த நான் அன்று என் தலை மீது மண்ணை வாரி இரைத்துக் கொண்டேனே! ஆனால் இது எவ்வளவு பெரும் பாக்கியம் என்பது எனக்கு அப்போது என்ன தெரியும்? எனக் கூறி வருத்தப்பட்டார்.

உண்மையில் இந்தத் திருமணம் அல்லாஹ்வின் நாட்டப்படி நடந்தது. மேலும் இதில் ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களின் சில ருஃயா (ஆன்மீகக் கனவு)களும் இருந்தன. அவற்றிலிருந்து இந்தத் திருமணம் அல்லாஹ்வினால் நடைபெற்றது என்பது தெரிய வருகின்ற அதே சமயத்தில், ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களுக்கு நன்மை, இறையச்சம், இறைவனுடன் இருந்த தொடர்பு பற்றியும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: என் முதல் கணவர் உயிருடன் இருக்கும் போதே நான் ஒரு கனவு கண்டேன். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன் பாதத்தை என் கழுத்தின் மீது வைத்திருக்கிறார்கள். இதை நான் என் கணவரிடம் கூறிய போது, நீ கண்ட கனவு உண்மை என்றால், எனது மரணத்திற்குப் பிறகு நீ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மனைவியாவாய் எனக் கூறினார்.

சவ்தா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அதற்கு மறுநாள் நான் இன்னொரு கனவு கண்டேன். சந்திரன் என் மடியில் வந்து விழுகிறது. பிறகு நான் பயந்து, இந்தக் கனவை என் கணவரிடம் (ஹஸ்ரத் சக்ரான் ரலியல்லாஹு அன்ஹூ அவர்களிடம்) கூறினேன். அப்போது அவர் நான் சீக்கிரம் மரணித்து விசுவேன்; நீ ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மனைவியாவாய் எனக் கூறினார்கள். அந்த நாளிலிருந்தே ஹஸ்ரத் சக்ரான் (ரலி) அவர்கள் நோயுற்றார்கள். அவர் உயிர் பிழைக்கவில்லை. அவருடைய மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் திருமணத்தின் கீழ் வந்து ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் உம்முல் மூஃமினீன் (நம்பிக்கை கொண்டவர்களின் தாய்) ஆக மாறினார்கள்.

ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் மிகவும் எளிய குணம் கொண்டவர்களாக விளங்கினார்கள். இயல்பிலேயே நன்மையும், கொண்ட கொள்கையில் பிடிப்புள்ளவர்களாகவும் திகழ்ந்தார்கள். நன்மையான விஷயங்களை ஒரு முறை கேட்டுவிட்டால் பின்னர் அதை வலுவாகப் பற்றிப் பிடித்துக் கொள்வார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கடைசி ஹஜ் ஆகிய ஹஜ்ஜத்துல் விதாவின் போது, தனக்கு இது கடைசி ஹஜ்ஜாகும். இதற்குப் பிறகு தனக்கு ஹஜ் செய்வதற்கு வாய்ப்பு கிடைக்காது என்பதை வெளிப்படுத்தியவாறு, இதுதான் கடைசி ஹஜ் ஆகும்; இதற்குப் பிறகு ஹஜ்ஜுக்கு தடைகள் ஏற்பட்டுவிடும் என்பதையும் கூறினார்கள். இதில் குறிப்பாக தனது கடைசி ஹஜ்ஜைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். கடைசி ஹஜ் என்ற இந்த சொல்லை ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் கேட்டிருந்தார்கள். எனவே தமது சாதுவான இயல்பின் காரணமாக சொல் அளவில் 'இறுதி ஹஜ்' என்பதைப் பேணி வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மற்ற மனைவியர்கள் இதற்குப் பிறகும் ஹஜ் செய்தனர். ஏனெனில் அவர்கள் அதனை தமது கடைசி ஹஜ்ஜாகக் கருதவில்லை. ஆனால் ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களோ, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கடைசி ஹஜ் என்று கூறிவிட்டார்கள். எனவே இனி நான் வாகனத்தில் ஏறி அமர்ந்து ஹஜ் செய்யச் செல்லமாட்டேன் எனக் கூறினார்கள்.

ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களைப் பற்றி பல நகைச்சுவை சம்பவங்களும் காணப்படுகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தஜ்ஜாலைப் பற்றி இறைவனிடமிருந்து செய்திகளைப் பெற்று அவற்றை தோழர்களிடமும், வீட்டிலுள்ளவர்களிடமும் கூறிவந்தார்கள். தற்செயலாக அந்த அடையாளங்களில் சில மதீனாவில் வாழ்ந்து வந்த இப்னு ஸய்யாது என்பவரிடம் காணப்பட்டன. தஜ்ஜால் என்பது ஒரு வேளை இப்னு ஸய்யாதுதானோ என்ற

சந்தேகத்தையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வெளிப்படுத்தினார்கள். இந்த தருணத்தில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். தஜ்ஜால் வெளிப்பட்டு விட்டான். இப்னு ஸய்யாது என்பவர்தான் தஜ்ஜால் என்று நான் கேள்விப்படும் போது, நான் ஒரு முறை ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களிடம் அதைக் கூறினேன். ஏனெனில் அவர் தஜ்ஜாலைப் பற்றி அதிக அச்சம் கொண்டிருந்தார். தஜ்ஜால் எவ்வளவு பெரிய ஃபித்னா என்றால், இன்று வரை அந்த அளவுக்கு பெரிய ஃபித்னா வரவில்லை. முந்தைய நபிமார்களும் தஜ்ஜாலைப் பற்றி அச்சமூட்டியிருக்கிறார்கள் என்ற செய்தியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாக ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் கேட்டு அதன் மீது முழுமையான நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் தஜ்ஜாலைப் பற்றி அதிகம் பயந்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஒரு முறை ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களிடம், தஜ்ஜால் வெளிப்பட்டுவிட்டானே என்றேன். அப்போது அவர்கள் பயந்து கட்டிலின் கீழ் மறைந்து கொண்டார்கள். ஒட்டடைகள் நிரம்பியிருந்த ஓர் அறைக்குள் நுழைந்துவிட்டதாகவும் இன்னொரு ரிவாயத்தில் வருகிறது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று கூறிய போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களை அங்கிருந்து வெளியேற்றியவாறு, சவ்தா! என்ன விஷயம்? ஏன் ஒளிந்து கொண்டாய் எனக் கேட்ட போது, தஜ்ஜால் பற்றிய பயத்தினால் நான் சென்று ஓடி ஒளிந்து கொண்டேன் எனக் கூறினார்கள். அந்த அளவுக்கு ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் மிகவும் அப்பாவியான பெண்ணாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மனைவியர்களில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி), ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி), ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி), ஹஸ்ரத் ஸய்னப் (ரலி) ஆகியோருடன் ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களுக்கு அதிக நேசமும் பாசமும் இருந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒருமுறை வீட்டில் பாயாசம் தயார் செய்தார்கள். அது சரியாக தயார் செய்யப்படவில்லையா அல்லது ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களுக்கு அது பிடிக்கவில்லையா எனத் தெரியவில்லை. ஆனால் ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் அதை சாப்பிட விரும்பவில்லை. ஆயினும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், இல்லை; நான் உங்களுக்கு இதை ஊட்டியே தீருவேன் என்றார்கள். ஆனால் ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் சாப்பிட மறுத்து வந்தார்கள். நீங்கள் சாப்பிடாவிட்டால் நான் உங்கள் முகத்தில் தடவி விடுவேன் என ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்குப் பிறகும் ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் மறுத்துவிடவே ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் உண்மையிலேயே ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களின் முகத்தில் தடவி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த நிலையில் ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்து மிகவும் புன்சிரித்தார்கள். ஆனால் சவ்தாவுக்கு பழிவாங்குவதற்கு முழு உரிமை இருக்கிறது. அவர் விரும்பினால் இந்த பாயாசத்தை ஆயிஷாவின் முகத்தில் தடவலாம் என மிகவும் நீதியுடன் தீர்ப்பளித்தார்கள். ஆனால் ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களின் இயல்பில் மிகவும் நன்மையும் சாது தன்மையும் காணப்பட்டது. எனவே அவர்கள் பழிவாங்கவில்லை.

தமது சாது பண்பினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் மிகவும் சிரிக்க வைத்து வந்தார்கள். ஆயினும் இந்த எளிமையிலும் கூட நன்மைகளை நற்செயல்களை இறைவணக்கங்களை செய்வதில் அதிக ஆர்வமும் இருந்தது. ஒரு முறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் நடு இரவுத் தொழுகை தொழ வேண்டும் என்ற ஆர்வம் தோன்றியது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழ எழுந்த போது இவர்களும் சேர்ந்து நின்று தொழத் துவங்கினார்கள். ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் சற்று உடல் பருமனான பெண்ணாக இருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வழக்கம் போல் நீண்ட நேரம் தொழுதார்கள். நீண்ட நேரம் நிற்பார்கள்; நீண்ட நேரம் ருகூ செய்வார்கள். நீண்ட நேரம் சுஜூது செய்வார்கள். மறுநாள் காலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் இன்று தஹஜ்ஜுத் தொழுகையில் எவ்வளவு நீண்ட ருகூ செய்ய வைத்து விட்டீர்கள்! எனக்கு மூக்கிலிருந்து இரத்தம்

வந்து விடக் கூடாதே என்பதற்காக நான் என் மூக்கைப் பிடித்துக் கொண்டேன் என்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைக் கேட்டு, மிகவும் புன்சிரித்தார்கள். ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களும் இப்படிப்பட்ட விஷயங் களினால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை மகிழ்ச்சியுடன் வைத்திருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கடைசி நோயின் போது மனைவியர்களிலேயே எவருடைய கை நீண்டதாக இருக்கிறதோ அவர்தான் மறுமையில் என்னை முதலில் வந்து சந்திப்பார் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீது அன்னாரின் மனைவியருக்கு எந்த அளவுக்கு பாசம் இருந்ததென்றால், எவருடைய கை நீண்டதாக இருக்கிறதோ அவர்தான் மனைவியர்களிலேயே முதலில் மரணிப்பார் என்ற செய்தி தெரிவிக்கப்படுகிறது. ஆனால் மனைவியர்களோ தமது கைகளின் நீளத்தை அளக்க துவங்கி விட்டார்கள். யாருடைய கை நீண்டதாக இருக்கிறது எனப் பார்ப்போமே. யார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு முதலில் மரணித்து அன்னாரை சென்றடைகிறார் எனப் பார்ப்போமே என்ற ஆர்வம் மனைவியர்களிடையே வந்து விடுகிறது! அந்த அளவுக்கு மனைவியர் தம்மையே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக அர்ப்பணித்துவந்தார்கள். ஆக கையை அளந்து பார்த்த போது, ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் உயரமானவர்களாக இருந்ததால் அவர்களின் கைதான் மிக நீண்டதாகவும் இருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முதன் முதலில் சென்று சந்திக்கும் பாக்கியம் தமக்கு கிடைக்கவிருக்கிறது என அறிந்து ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு மனைவியர்களில் முதன் முதலில் இறந்தவர் ஹஸ்ரத் சவ்தா (ரலி) அவர்கள் அல்ல. அதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிய முன்னறிவிப்பு பொய்யாகி விட்டது என்றும் நாம் கூற முடியாது. பின்னர் உண்மை விளக்கம் என்ன?

(அடுத்த இதழில்)

---

**17 ஆம் பக்க தொடர்ச்சி...**

அனைத்தையும் தியாகம் செய்து விடுங்கள். தனது வேதனைமிக்க துஆவினால் இதன் விதியை தட்டி யெழுப்புங்கள். முழு மனிதயினத்திற்காகவும் அருள் எனும் அடைமழையாக ஆகிவிடுங்கள்.

ஆனால் நினைவில் கொள்ளுங்கள். உலகிற்கு வழங்கும் முன் நீங்கள் இந்த அருட்கள், கொடைகள் மற்றும் நன்மைகளின் மூலம் உங்களது உள்ளங்களை ஒளிமயமாக்கிக் கொள்ளுங்கள். அப்போதுதான் இந்த ஆன்மீகக் கருவூலங்களை அடுத்து வருபவர்களிடம் கொண்டு சேர்க்கும் பணியை நிறைவேற்ற முடியும். இப்போது உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த சுமை உங்கள் தோள்களில் உள்ளது. நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைகளாவீர்கள். இந்தத் தகுதியை கவனத்தில் கொண்டு இந்த கருவூலங்களை உலகின் எல்லை வரை எட்டவைத்துக் கொண்டே செல்லுங்கள். இந்த செல்வங்களும் கொடைகளும் அருட்களும் ஒரு போதும் முடிவடையாதவையாகும். நினைவில் கொள்ளுங்கள். இந்த அருட்களின் மூலம் மட்டுமே உலகின் விதி மாறும். மேலும் நிச்சயம் உலகம் ஒரு நாள் மனிதயினத்தின் கருணையாளரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமையாகி எல்லா துன்பங்களிலிருந்தும் ஈடேற்றம் பெறும். இன்று இந்த சேவை செய்யும் வாய்ப்பு உங்களது பங்கில் வந்துள்ளது. நமது இறைவன் மகிழ்ந்து நம்மை தனது அருள் மடியில் அணைத்துக் கொள்ளும் வகையில் தியாக உணர்வுடன் இந்தப் பணியை நிறைவேற்றுங்கள். இந்த வாய்ப்பையும் நற்பேற்றையும் நம்மில் ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் வழங்குவானாக. ஆமீன்.

வஆகிரு தஃவானா அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

(முற்றும்)

**தமிழில் :**

**முஅல்லிம் M. முஸ்ஸம்மில்**

# இமாமின் துஆவுக்கு அதிக உரிமையுடையவர்கள் யார்?

## ஹஸ்ரத் நான்காம் கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்:**

''ஜமாஅத்திற்குக் கஷ்டங்கள் ஏற்படும்போது, நான் அவர்களுக்காக துஆச் செய்ய வேண்டுமென்று அவர்கள் எனக்கு எழுதுவது இயல்பான ஒன்றாகும். தங்களைப் பல்வேறு கஷ்டங்கள் சூழ்ந்து கொண்டதாகக் கருதுபவர்கள், தங்கள் கஷ்டங்கள் நீங்குவதற்காக நான் துஆச் செய்ய வேண்டுமென்று எழுதும்போது, அவர்களின் மனநிலையே எனக்கும் ஏற்படுகின்றது. இவ்வாறு ஏற்படுவது, எனது அந்தஸ்த்தின் காரணத்தால் அல்ல; எனினும் இது, அவர்கள் என்னைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்களே என்பதனாலாகும்''.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மனம், மிகவும் விசாலமானதாக இருந்தது. அதன் விசாலத்துடனும் அதன் தன்மையுடனும் அவர்களின் சீடர்களுள் எவரது மனமும் போட்டியிட முடியாது. ஆனால் அந்த மனத்தைப் போன்று நமது மனமும் ஆக வேண்டுமென்பதற்காக முயற்சி செய்யலாம்.

''தங்களுக்காக நான் துஆச் செய்ய வேண்டுமென்று கடிதம் எழுதுபவர்களுள் எவர்கள் மார்க்கத் தொண்டு செய்பவர்களாகவும் இறைவனுக்காக வாழ்பவர்களாகவும் இறை வனுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்களாகவும் இறையடியார்களுக்குப் பயனளிப்பவர்களாகவும் இருக்கிறார்களோ அவர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன என்று எனக்குத் தெரிந்தால், உண்மையிலேயே அவை எனக்கும் ஏற்படுகின்றன''.

உள்ளபடியே (அவர்களின் கலீஃபாவாகிய) எனது நிலையும் இவ்வாறுதான் இருக்கிறது. எனது உள்ளத்தை நான் பரிசோதனை செய்து பார்த்தபோது, இந்த உண்மை புலனாயிற்று. எவர்கள் மார்க்கத் தொண்டு செய்பவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் எனது உள்ளத்தில் இடம் பெற்றவர்களாக இருக்கின்றார்கள்; அவர்களே மற்றெல்லாரையும் விட மிக அதிகமாக எனது துஆக்களுக்கு உரியவர்களாக இருக்கிறார்கள். இந்த உண்மையை நான், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கூறப்பட்ட அந்தச் செய்தியைப் படித்துப் பார்த்த பிறகே தெரிந்து கொண்டேன். நான் அதனைப் படித்துப் பார்த்த போது, எனது உள்ளத்தைப் பரிசோரித்துப் பார்த்தேன்; தஹஜ்ஜுது தொழுகையில் செய்யும் துஆக்களிலும் மற்ற தொழுகைகளில் செய்யும் துஆக்களிலும் எவர்களுக்காக அசாதாரணமான முறையில் துஆச் செய்வதற்கு வாய்ப்பு கிடைத்ததோ அவர்கள் மிக நல்ல முறையில் மார்க்கத் தொண்டு செய்பவர்களாக இருக்கிறார்கள். அல்ஹம்துலில்லாஹ். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

இந்த வகையில் எனது மனமும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மனத்தைப் போன்றியிருப்பதாகத் தெரிகின்றது. இதில் எனக்குச் சந்தேகமில்லையென்றாலும் அந்தஸ்த்தைப் பொருத்தவரை எனது மனம் குறைந்த அந்தஸ்த்தைக் கொண்டதேயாகும்.

**அடுத்து ஹஸ்ரத் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

''நம்முடைய சகோதரர்கள் மார்க்கத்திற்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று தங்களது உள்ளத்தில் உறுதியான எண்ணத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்; தங்களால் மார்க்கத்திற்கு என்னென்ன தொண்டுகளெல்லாம் செய்ய முடியுமோ அந்தத் தொண்டுகளையெல்லாம் செய்ய வேண்டும்''.

நான் உண்மையாகவே கூறுகிறேன். இறைவனது பார்வையில், எவர் மார்க்கத்திற்குத் தொண்டு செய்பவராகவும் மக்களுக்குப் பயனளிப்பராகவும் இருக்கின்றாரோ அவர் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவராவார். இவ்வாறில்லாதவர்களை அவன் அறவே பொருட்படுத்துவதில்லை. இவர்கள் ஆடு,

மாடுகளைப் போன்றும் நாய்களைப் போன்றும் மரணமடைவதைப் பற்றி அவன் அறவே பொருட்படுத்துவதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அந்த வாசகத்தில் கூறப்பட்டிருப்பதற்கேற்ப மிக அதிகமானவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். அல்ஹம்து லில்லாஹ். இத்தகையவர்களின் எண்ணிக்கையைத் தெரிந்து மிகுந்த வியப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது இத்தகையவர்களின் எண்ணிக்கை இலட்சக் கணக்காக ஆகிவிட்டது. இதற்கு முன்னர் ஒரு காலத்தில் இத்தகையவர்களின் எண்ணிக்கை நூற்றுக் கணக்கில்தான் இருந்தது. இத்தகையவர்களைக் கொண்ட ஜமாஅத்து உலகில் அஹ்மதிய்யா ஜமாஅத்தைத் தவிர வேறெந்த ஜமாஅத்தும் கிடையாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அவன் எனக்கு மிகவும் பற்றுள்ள - மிகவும் நம்பிக்கைக்குரிய ஜமாஅத்தை வழங்கியுள்ளான். நான் அவர்களை எந்தப் பணிக்காக அழைத்தாலும் எந்த நோக்கத்திற்காக அழைத்தாலும் மிகவும் ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக் கொண்டு ஓடோடி வருகிறார்கள்''.

இந்தச் சொற்களைப் படித்து விட்டு எனது உள்ளம் உருகி, எனது கண்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மிகவும் பற்றுள்ள - மிகவும் நம்பிக்கைக்குரிய - ஜமாஅத்தை வழங்கிய மகிமைக்குரிய அந்த இறைவன், இக்காலத்திலும் அவர்களின் சீடனாகிய எனக்கும் அதே ஜமாஅத்தை வழங்கியுள்ளான்; எண்ணிக்கையில் இவர்கள் மிக மிக அதிகமானவர்களாக இருக்கிறார்கள்; இவர்கள் இடத்திற்கு இடம் பெருகிக் கொண்டுமிருக்கிறார்கள்.

இறைவனருளால் இன்றும் அஹ்மதிகள் அவ்வாறே என்னிடம் ஓடோடி வருகிறார்கள். உண்மையிலேயே சில நேரங்களில் நான் அழைக்கும் போது, அவர்கள் மிக விரைவாக வருவதைக் கண்டு எனக்கு வியப்பு ஏற்படுகிறது; அவர்கள் செய்யும் பொருள் தியாகங்களைக் கண்டு நான் அளவற்ற வியப்பில் ஆழ்ந்து விடுகிறேன்; நான் இந்த அளவு எதிர்பார்க்கவில்லையே; நான் எதிர்பார்த்ததைவிட மிக அதிகமாகப் பொருள் தியாகமும் ஏனைய தியாகங்களும் செய்து விடுகின்றார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''நம் ஜமாஅத்தினரிடம் நம்பிக்கைக்குரிய தன்மையும் பற்றும் காணப்படுவதை நான் காண்கின்றேன்; நான் அவர்களுக்கு என்ன கட்டளையிட்டாலும் அதனை நிறைவேற்றுவதற்கு அவர்கள் தயாராகி விடுகிறார்கள்''.

உண்மையிலேயே ஒரு ஜமாஅத் இவ்வாறு தயாராக ஆக வேண்டுமானால், அதற்குத் தனது இமாமுக்குக் கட்டுப்படுவதில் இத்தகைய ஆர்வமும் பற்றும் உண்மையும் இல்லாதவரை அது சாத்தியமே இல்லை. இது நம் ஜமாஅத்திற்கு இறைவன் செய்த மாபெரும் அருளாகும்! இதற்காக நான் எந்த அளவு இறைவனுக்கு நன்றி செலுத்தினாலும் அது குறைவேயாகும்.

(ஹஸ்ரத் நான்காம் கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களது 28.11.1997 ஜுமுஆ உரையிலிருந்து)

**தமிழில் :**

**மவ்லவி P.M. முஹம்மது அலி H.A**
**கொள்கை பரப்புநர், திருச்சி**

**Parveen Enterprises**
Dealers : Papers, Boards & Binding Materials
Vadapalani, Chennai 600 026.

**M.Rafique & Sons**
Exporters And Agents
U55, 9th St, Anna Nagar, Chennai-40.
Ph : 2628 1531, Fax : 2628 1532

NABI VAZHI Tamil Monthly Febuary 2009
Registered with the Registrar of News Paper of India at No.TN/TAM/05/15211

# நாற்பது நபி மொழிகள்

(தொடர் : 8)

**ஹதீஸ் எண் : 36 அஸ்ஸலாமு கப்லல் கலாமி**

**பொருள் :** பேசுவதற்கு முன் சலாம் கூறுங்கள்.

**விளக்கம் :** ஒருவரை சந்திக்கும்போது அல்லது எந்த சபையிலாவது செல்லும்போது முதலில் சலாம் கூறுங்கள். அதற்குப் பிறகு பேச வேண்டியதைப் பேசுங்கள்.

**ஹதீஸ் எண்: 37 தர்குத் துஆயி மஃஸியதுன்**

**பொருள் :** துஆவை விட்டு விடுவது பாவமாகும்.

**விளக்கம் :** நமது நிலைமைகள் இறைவனுக்குத் தெரியும். எனவே நாம் அவனிடம் கேட்கவோ அல்லது துஆ செய்யவோ தேவையில்லை எனக் கருதுபவர்கள் சிந்திக்க வேண்டும்.

**ஹதீஸ் எண் : 38 ஸின் வர்ஜிஹ்**

**பொருள் :** நிறுங்கள்; குனியும் வரை நிறுங்கள்

**விளக்கம் :** நஷ்டமாக நிறுக்காமல், ஏமாற்றாமல் உண்மையிலேயே நன்றாக அதிகப்படியாக குனிந்து நிறுங்கள்.

**ஹதீஸ் எண் : 31 இத்த குல்லாஹ ஃபிந்நிஸாயி**

**பொருள் :** பெண்கள் விஷயத்தில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்.

**விளக்கம் :** ஏனெனில் அவர்கள் பலவீனமானவர்கள், குறைந்த அறிவுடையவர்கள், அதிகாரத்திற்கு உட்படுத்தப்படுபவர்கள். எனவே அவர்களின் உரிமைகளை கவனத்தில் கொள்ளுங்கள். மேலும் அவர்களுக்கு அருமையாக மார்க்கப் பயிற்சி கொடுங்கள்.

**ஹதீஸ் எண் : 40 தலபுல் ஹலாலி ஜிஹாதுன்**

**பொருள் :** வாழ்க்கைக்குத் தேவையானவற்றை ஆகுமான வழியில் தேடுவதும் மார்க்கப் போர் ஆகும்.

**விளக்கம் :** குறிப்பாக இந்த காலத்தில் ஆகுமான வாழ்க்கை வழிவகைகளைப் பெறுவதும் மிகக் கடினமானதாகும். ஆகுமானவற்றிற்கும், ஆகாதவற்றிக்கும் வித்தியாசமே இல்லாத அளவு திருட்டுக் கடைவீதி, ஏமாற்றுதல், வஞ்சனை, வாக்குறுதி மீறுதல், உரிமைகளை அமுக்குதல், நம்பிக்கை துரோகம் ஆகிய தீமைகள் பொதுப்படையானவையாகி விட்டன. பாலில் தண்ணீரை கலக்குகின்றனர். நூறு ரூபாய் மாத வருவாயைப் பெறும் பணியாளர் ஆகுமான வழிவகைகளை விட்டு வெறுண்டோடுகிறார். தனது வருமானம் ஐந்நூறு ரூபாய் ஆகும்போது தான் திருமணம் செய்வதாகக் கூறுகிறார். அதுவரை தன் ஆசைகளை நிறைவேற்றுவதற்காக அவர் பயன்படுத்தும் அத்தனை முறைகளையும் ஷரீஅத் ஆகாதவை எனக் குறிப்பிட்டுள்ளது.

(முற்றும்)

தமிழாக்கம்

**அபூ ஷாஹித்**

If undelivered please return to:
முகவரி : நிர்வாகி - **நபி வழி**
**அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்**
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி,
கோடம்பாக்கம்,சென்னை-24. Ph : 24817174

Printed & Published By : **K. NASIR AHMED**
From: No.11, First Main Road, U.I. Colony, Kodambakkam, Chennai-24. Ph : 2481 7174.
Editor : **O.M. MUZZAMMIL AHMAD**.
Printed at : **Script Printers**, Periyar Pathai Choolaimedu, Chennai - 600094.

**பிப்ரவரி - 2009 விலை ரூபாய் 7/-**